[illegible] நூலகம்


# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர் 113 இதழ் 26 31-7-1987 (ஜுலை 26—ஆகஸ்ட் 2) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



### கன்னி உரை

புதிய குருநாகல் மறை வட்ட புதிய ஆயர், தம் திரு நிலைப்படுத்தலின் பின் ஆற்றிய முதல் உரையில் ''வேதனைக் குரல் நிரம்பி, இரத்தக் கறை படிந்துவரும் எம்நாட்டில் நிரந்தர சமாதானத் தீர்வுகாணச் சகலரும் முன் வரவேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார். இவ் விண்ணப்பம் வீண் போகாது.

யாழ் ஆயர் "தமிழ் மக்களுக்கு நீதி மட்டுமன்று, இந்நாட்டிற் சம உரிமையும் கொடுக்கவேண்டும்"

# குருநாகல் ஆயர் திருநிலைப்படுத்தப்பட்டுப் புதிய மறைவட்டத்தைப் பொறுப்பேற்றார்

**பேரருள்திரு லியோபோல்ட் றேமன் பீரிஸ் ஆண்டகை அவர்களின் ஆயர் திருநிலைப்படுத்தல், இம்மாதம் 18ஆம் திகதி காலை குருநாகல் புனித அன்னாள் பேராலயத்திற் கோலாகலமாக நிறைவேற்றப்பட்டது- புதிய ஆயர், சிலாப மறைவட்ட ஆயரிடமிருந்து, அதிகாரபூர்வமாகத் தமது புதிய மறை வட்டத்தைப் பொறுப்பேற்றார். அன்றுமாலை நடைபெற்ற, வடக்கு-தெற்குக் கலந்துரையாடலில், யாழ் ஆயர் "வீடு தீப்பற்றி எரிகிறது; நீங்கள் அதனை அணைப்பதற்குப் பதிலாக, என்ன செய்யலாம் எனத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறீர்கள்." என்றார்.**



புதிய ஆயர் திருநிலைப்படுத்தல், குருநாகலில் நடைபெற்றபோது, விளக்கவுரைகள் அனைத்தும், மூன்று பாடல்களும், மறையுரையும், நன்றியுரையும், தமிழ் மொழியிலும் இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது. சிலாப மறைவட்ட ஆயர் பேரருள்திரு பிராங்க் மாக்கஸ் பெர்னாண்டோ சிங்களத்தில் மறையுரை ஆற்றிய பின், 8 நிமிடங்கள் தமிழிலும் மறையுரை ஆற்றினார். புதிய ஆயர் இறுதியில் நன்றியுரை வழங்குகையில், முன்னையவரைவிட அழகு தமிழில் நீண்ட நன்றியுரை வழங்கினார்.

காலை 8.00 மணிக்கு ஊர்வலத்துடன் ஆரம்பமான வழிபாடு, நண்பகல் 12.15க்கு முடிவடைந்தது. திரளான மக்களும், ஏராளமான குருக்கள், கன்னியர்களும் புனித அன்னாள் கல்லூரி மைதானம் நிரம்புமளவுக்குக் குழுமி நின்றனர். அனைத்தும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப் பிடத் தக்கது.

மன்னார் ஆயர், சுகயீனம் காரணமாகச் சமுகம் தரமுடியாதிருந்ததால், திருமலை-மட்டுநகர் ஆயர் பேரருள் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் அங்கு திருநிலைப்படுத்தும் துணை ஆயராகப் பணிபுரிந்தார். புதிய ஆயரிடம், புதிய மறைவட்டக் குருக்கள் அனைவரும், தாம் அவருக்கு வணக்கம் செலுத்தவும், கீழ்ப்படியவும் வாக்குக் கொடுத்தனர்.

தேவத்தைப் பொது நிலையினர் சம்மேளனத்தின் பின் கூடித் தமிழர் பிரச்சினை பற்றி ஆராய்ந்தவர்கள், குருநாகலில் ஒன்று கூடி வடக்கு -தெற்குப் பேச்சுவார்த்தையிற் பங்கு பற்றினர். அதற்கு அழைப்புப் பெற்ற யாழ். ஆயர், அதிற் கலந்து கொண்டபோது ''இன்றைய பிரச்சினைகள் தீரவேண்டுமென்றால், வடக்கு, கிழக்குத் தமிழ் மாகாணங்கள் இணைந்த சுயாட்சியான மாநிலம் ஒன்று அவசியம். இரண்டாவதாக, தேசிய ஒருமைப்பாடு நிலைக்க வேண்டுமாயின், தமிழ் தேசிய மொழியாகவும், அரச சரும மொழியாகவும் நடைமுறைப் படுத்தப்படவேண்டும்'' என்றார்.

''தமிழ் மக்களுக்கு, இந்த நாட்டிற் சம உரிமை வேண்டும். இரண்டாந் தரப்பிரஜைகளாக வாழ முடியாது. தமிழ் மக்களுக்குச் சம உரிமை மறுக்கப்படுவதால், அவர்கள் தம் பகுதிகளை இந்தியாவுடன் இணைந்த ஒரு மாநிலமாக்கவும் விருப்பம் தெரிவித்து விட்டனர்.''

''வடக்கில் மக்கள் கொல்லப்படுகின்றனர். உடைமைகள் அழிக்கப்படுகின்றன. உடுத்த உடுப்புக்களுடன் அகதிகளாக ஓடிப்போய்த் தம் இல்லிடங்களுக்குத் திரும்ப முடியாது தவிக்கின்றனர். அதனை நீங்கள் நிறுத்துவதற்குப்பதிலாக, இப்படிக் கூடிக் கலந்துரையாடலில் ஈடுபடுவது வீடு எரியும்போது அதனை அணைப்பதற்குப்பதிலாக, கூடித் திட்டம் தீட்டுவதற்குச் சமமானது'' என்றார்.

## ஊறணிப் பங்கின் அவலம்

கடந்த யூன் மாதம் 7ஆம் திகதி ஞாயிறு அதிகாலை பிறப்பிக்கப்பட்ட திடீர் ஊரடங்கு ஊறணிப் பங்கினை விட்டு வெளியேறிய மக்கள் ஒரு மாதம் சென்ற பின்னும் இன்னுத் திரும்ப முடியாமல், சில் லாலை, பண்டத்தரிப்பு, இளவாலை, சுன்னாகம் போன்ற

## மறையாசிரியர் கருத்தரங்கு

மன்னார் மறைவட்டத்தில் மறையாசிரியருக்கான கருத்தரங்கு ஜூன் 26, 27, 28 ஆம் திகதிகளிற் புனித வளன் திருமறைப்பணி நிலையத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் நூற்றுக்குமேற்பட்ட மறை கைச் சார்ந்த செல்வி பெ.சந்திரா மெடோனா உப தலைவியாகவும், விடத்தல் தீவுப் பங்கைச் சார்ந்த செல்வி தே.சித்திரா உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கருத்தரங்கு மிகவும் அனுப

# ஊறணிப் பங்கின் அவலம்

கடந்த யூன் மாதம் 7ஆம் திகதி ஞாயிறு அதிகாலை பிறப்பிக்கப்பட்ட திடீர் ஊரடங்கு உத்தரவைத் தொடர்ந்து ஊறணிப் பங்கினை விட்டு வெளியேறிய மக்கள் ஒரு மாதம் சென்ற பின்னும் இன்னும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியாமல், சில்லாலை, பண்டத்தரிப்பு, இளவாலை, சுன்னாகம் போன்ற இடங்களில் சிதறுப் பட்டு, ஆலய மண்டபங்களிலும், மரங்களின் கீழும் அகதிகளாகக் காலத்தைக் கழித்து வருகின்றனர்.

ஊறணி, காங்கேசன்துறை, வீமன்காமம், தெல்லிப்பளை ஆகிய ஊர்களில் அமைந்துள்ள மூன்று சிற்றாலயங்களையும் அண்டி வாழ்ந்த மக்களில் நூற்றுக்குத் 98%மானோர் இன்று தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாத பயங்கர சூழ்நிலை இன்னமும் நிலவுகிறது. மாவிட்டபுரம், வீமன்காமம் ஆகிய இடங்களில் மினி முகாம்கள் அமைத்து இராணுவம் நிலை கொண்டபின் ஆள் நடமாட்டமில்லாத பூமியாக மாறிவிட்ட இப்பிரதேசத்தில் ஆலயங்களில் வழிபாடுகளும் நடை பெறுவதில்லை.


தகவல்: உதவிப் பங்குத் தந்தை அருள்திரு ஜெராட் சவரிமுத்து

---

## மன்னார் ஆயர்

## தோமஸ் சவுந்தரநாயகம்

## அவர்களுக்கு



## அன்பு வாழ்த்து

(ஆயர் திருநிலைப்படுத்தல் நினைவு தினம் 30-07-1987)

தாய்மடியில் அருளமுதை அருந்தி நேசத்
தந்தைவழி காட்டுதலிற் கலைகள் தேர்ந்து
தூயதிரு மறைக்குருவாய் ஞான வாழ்வின்
துறைகண்டு நிறைகொண்டு மந்தை காக்கும்
ஆயரெனத் திகழ்ந்தொளிரும் அன்பின் தோமஸ்
ஆண்டகையார் வேண்டுவன அனைத்தும் பெற்றே
தேயமெலாம் அகமகிழ்ந்தே ஆன்ம சேவைத்
திலதமெனப் புகழ்பாட நீடு வாழ்க.

---

மன்னார் மறைவட்டத்தில் மறையாசிரியருக்கான கருத்தரங்கு ஜூன் 26, 27, 28 ஆம் திகதிகளிற் புனித வளன் திருமறைப்பணி நிலையத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் நூற்றுக்குமேற்பட்ட மறையாசிரியர்கள் கலந்து கொண்டனர். கருத்தரங்கின் மையப் பொருளாக ''பெற்ற வாழ்வைப் பிறரோடு பகிர்வோம்'' என்ற விருது வாக்குக் கொடுக்கப்பட்டு இருந்தது.

கருத்தரங்கின் இறுதி நிகழ்ச்சியாக, மறைவட்டத்தின் வரலாற்றின் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்றது. மன்னார் மறைவட்டத்தின் மறையாசிரியர் சங்கம் முதன் முதலாக உருவாக்கப்பட்டுச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் வங்காலைப் பங்கைச் சார்ந்த திரு.செ.செ. பீரிஸ்(இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் தலைவராகவும், மன்னார்ப் பங்கைச் சார்ந்த செல்வி நீ. அருள்மேரி செயலராகவும், பள்ளிமுனைப் பங்கைச் சார்ந்த செல்வி செ.றொசிற்றா பொருளராகவும், தலைமன்னார்ப் பங்கைச் சார்ந்த செல்வி பெ.சந்திரா மெடோனா உப தலைவியாகவும், விடத்தல் தீவுப் பங்கைச் சார்ந்த செல்வி தே.சித்திரா உபசெயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கருத்தரங்கு மிகவும் அனுபவம் பொருந்தியதாகவும், மறை வாழ்வு பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும், மறைவாழ்வுக் கல்விப் பணியை மேற்கொள்ள ஊக்கமூட்டுவதாகவும் அமைந்திருந்தது.

தகவல்: நீ.அருள்மேரி. செயலர்

---

## பூந்தோட்டம்

யாழ் பேராலயப் பங்கு பீடப்பணியாளர்கள் தமது சபைப்பாதுகாவலர் புனித ஞானப்பிரகாசியாரின் விழாவை இம்மாதம் 11 ஆம் திகதி கொண்டாடினார்கள். அன்று பி.ப. 6 மணி யளவில் அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட பூந்தோட்டத்தைப் பேராலயப் பங்குத்தந்தை அருள்திரு கில்லறிஜெபநேசன் அடிகளார் திறந்து வைத்து

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

---

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

# கரத்தை வண்டியில் காதவழிப் பயணிகள்

(இலங்கையில் தி. கு. கன்னியர்)

"அருமைக் குமாரத்திகளே, உங்கள் ஞானச்சீவிய ஓட்டத்தைத் தடை செய்யக்கூடியது இனிமேல் ஒன்றுமில்லை... புண்ணிய வாழ்விலும், அங்கத்தவர் தொகையிலும் முன்னேறிச் செல்லுங்கள். நாலாபக்கங்களிலும் உங்கள் கரங்கள் நற்கிரிகை, நன்முன் மாதிரிகை என்னும் விதைகளை விதைத்துச் செல்வனவாக!" என்ற திருக்குடும்பச் சபை நிறுவுனர் அருள் திரு பீற்றர் பியன்வெனு நோ ஆய் அடிகளின் ஆசி மொழியானது, இலங்கை தி. கு. சபை ஆரம்பமாகி ஏழு வருடங்களுக்குள், உயிராற்றலுடன் உயரலாயிற்று. யாழ் நகரில் சுதேச, ஆங்கிலமொழிப் பாடசாலைகள், அனாதையில்லம், விடுதிச்சாலை, தொழிற் பயிற்சிநிலையம், புனித இராயப்பரின் சுதேச கன்னியர் சபை என ஆரம்பவளர்ச்சிகள் அனந்தம். இத்தகையதொரு வளர்ச்சியைத் தம் ஆளுகைக்குட்பட்ட அனைத்து மாகாணங்களிலும் ஏற்படுத்தவேண்டுமெமன யாழ் ஆயர் வந். பொஞ்ஜீன் அடிகள் விரும்பினார்கள். அக்காலத்தில் வட, வடமேல், வடமத்திய, கீழ்மாகாணங்கள் அவரது கண்காணிப்பின்கீழ் இருந்தன.

"பழம் நழுவிப் பாலுள் விழுந்த மாதிரி," 1870ஆம் ஆண்டு போர்டோ சென்றிருந்த ஆயர் அவர்களுக்குத் தி. கு. சபையின் ஏழுவருட அறுவடை பற்றிப்பேசிய அவர்கள், வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகலில், சபையின், இரண்டாவது மடத்தை நிறுவுதல் பற்றி ஆலோசித்தார்கள். மனப்பூர்வமான அனுமதி கிடைத்தது. தாம் இலங்கை திரும்புமுனனமே, இவ்வாவல் நிறைவேறவேண்டுமென விரும்பிய ஆயர், அதுபற்றி இலங்கையில் தி.கு. சபைத் தலைவி, மதர் சேவியர் அவர்களுக்கு ஒரு கடுகதித் தபால் அனுப்பிவைத்தார்கள்.

வேதனையும் சாதனையும்

ஆயரின் கடுகதி மனுவேகத்திற் கன்மயச சம்காதரிகளைக்

பயணிகளுக்கு அருள் திரு மொறுவா அடிகள் தலைமை தாங்கினார்கள். 1870 ஆவணி 27ஆம் நாள், பயணத்திற்கு ஒரு நாள் முன்கூட்டியே, சுதேச கன்னியரின் கரத்தை புறப்பட்டது. அதிற் சகோதரிகள் பொலின், மாறி, யுஸ்ரீனு ஆகிய மூவரும் சாவகச்சேரிக்குச் சென்று, மறு நாளைய நீண்ட பயணத்திற்கான முதலாவது சத்திரத்தை முஸ்திப்புச் செய்தார்கள். மறு நாள் அருள் திரு மொறுவா அவர்களின் கரத்தை முன்செல்ல, மற்றிரு. அருட் சகோதரர்களின் கரத்தைகள் முன் பின்னாக நகர, ஐரோப்பிய சகோதரிகளான மேரி ஸ்ரனிஸ்லோஸ், மேரி யோசவ், மேரி யோசவ்வின் ஆதியோரின் கரத்தை நடுவிலுமாகப் பிரயாணம் ஆரம்பமாயிற்று. சகோதரிகளை வழியனுப்ப, மதர் சேவியர் சாவகச் சேரிவரை தொடர்ந்தார்கள்.

பயண அனுபவங்கள்.

காலையிளந் தென்றலுடன், பொழுது புலரா முன் புறப்பட்ட கரத்தைகள், சாவகச்சேரியிற் சிறிது நேரம் தங்கி, இரவு 9.30 மணிக்குப் புலோப்பளையைச் சென்றடைந்தன. திறந்த வெளியொன்றில் வண்டிகளை நிறுத்தி விட்டு, இரவுச் சமையலை ஆரம்பித்தனர். பசியாறியதும் பயணம் தொடர்ந்தது. கரத்தைகளின் "கட கட" ஒலியும், உதைப்பும், சாமத்தூககத்தைக் கலைத்தன. மறு நாட்காலை சுரி நிறைந்த ஒரு நீர் நிலைக்கண்மையிற் சிறிது ஓய்வு எடுத்தனர். பயணிகளின் கால்களும் கைகளும் முகமும் வீக்க முற்றிருப்பதை அவதானித்தனர். நீர்நிலையிற் களையாறியபின், பசிய தென்னஞ் சோலைகளினூடாக, அடர்ந்த காடொன்றைச் சென்றடைந்தனர். அவ்விடத்தின் பெயர் ஒல்லிய பள்ளம். அங்குதான் பயணிகள் முதன்முதலாக வானக் கூரையின் கீழ் நிலத்தில் துயில் கொண்டார்கள். பயங்கர இருளின் நடுவே, "தேவன் மாத்திரம்" என்ற ஒரே நம்

# விடுதலைப் போரிற் பலியான வீரத்துறவி

## முத்திப்பேறுபெற்ற ஈடித் ஸ்ரெயின் (எஸ். எம். ஜே.)

யூத இனப் படுகொலை நடாத்திய ஹிட்லரின் ஆட்சியில் ஜேர்மனியில் வாழ்ந்த கார்மேல் சபைத்துறவியான யூத மங்கை ஈடித் ஸ்ரெயின் அண்மையிற் பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் ஜேர்மனிய விஜயத்தின் போது முத்திப்பேறு பெற்ற பட்டம் சூட்டப்பட்டு மகிமைப்படுத்தப்பட்டார். இது ஜேர்மனியில் வாழ்ந்துவரும் யூத சமுகத்தினரிடையே சர்ச்சையை ஏற்படுத்திய சம்பவமாக உலகச் செய்தியில் அடிபட்டது பலருக்கு ஞாபக மிருக்கலாம். இந்தப் புனிதையின் வரலாறு நம்மிற் பலருக்குத் தெரிந்திருக்காது. அதைச் சுருக்கமாக இங்கு தருகிறோம்.

போலந்து தேசத்திலே 1881ஆம் ஆண்டிலே ஈடித் ஸ்ரெயின் பிறந்தார். முன்னர் இது, ஜேர்மானிய பட்டினப் பிரதேசமாய் விளங்கியது. அப்பொழுது பிறிஸ்லாவு என அழைக்கப்பட்ட ஜேர்மானியப் பட்டினந்தான் இது. இங்கு சேக்விறட், ஒக்ஸ்ரே ஸ்ரெயின் தம்பதிகளுக்கு ஏழாவது பிள்ளையாகப் பிறந்தாள் ஈடித். மூன்று வயதுச் சிறுமியாயிருந்தபோது ஈடித் தந்தையை இழந்தாள். கணவன் இறந்ததினால், அவர்கள் செய்துவந்த மரவியாபாரப் பொறுப்புக்களை மனைவியே சுமக்கவேண்டியிருந்தது. அத்தொழிலால் நல்ல வருமானம் கிடைத்ததனாற் குடும்பத்தை ஒருவாறு நடாத்த முடிந்தது.

ஈடித் ஒரு யூதப்பெண். அவளது அன்னை தன்னை ஒரு யூதப்பெண் எனக் கூறிக்கொள்வதிற் பெருமை கொள்பவள். எந்த வகையிலும் குறை காண முடியாதவாறு யூதமதக் கோட்பாட்டுக்கமையவும், யூதமக்கள் மரபுகளுக்கமைவாகவும் ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவள் அவள். அவளது, பற்று நிறைந்த தேவபயம், குழந்தைகளின் மகிழ்ச்சிக்கும், நற்கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் பின்னணியாகத் திகழ்ந்தது.

அன்பு. திறமை, ஆற்றல் என்ற சூழலில் ஈடித் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து வரலானாள். அவள் வயதுக்கு மிஞ்சிய மதிநுட்பமும், வாசிப்பில் அலாதியான விருப்பு முடையவள். உற்சாகமும், குதூகலமும், ஆர்வமும் மிக்க அழகிய சிறுமி ஈடித். அவள், விரைவிற் கல்வியிற் பிரகாசிக்கத் தொடங்கினாள். சமூக நிகழ்ச்சிகளிலும் துடிப்போடு பங்குகொள்ளுவாள். பிரச்சினைகளுக்குச் செவிமடுத்து உதவி செய்வதிலும், ஆலோசனை வழங்குவதிலும் எப்பொழுதும் தயாராயிருப்பாள்.

1911ஆம் ஆண்டு ஈடித்

ஒரு நீண்ட ஓய் வெடுக்கவேண்டியதாயிற்று. துறவிகளை முதன் முதலாகப் பார்த்த மக்கள் ஆச்சரியப்பட்டனர். அன்போடு பழகி, உணவும் உறைவிடமும் அளித்தனர். அங்கிருந்து சிமிலக்குச்சியூடாக மதவாச்சியை அடைந்தனர். இக்கட்டத்தில், திடீரெனப் புயல் எழும்பி, மழை யோடும் இடி முழக்கத்தோடும் வீசியடித்தது பாதைகள் சுரியும் சகதியுமாயின. இதனால், பயணமும் தாமத மாயிற்று. புரட்டாசி 4ஆந் திகதி, எவ்வளவோ இன்னல்களினூடாக அனுராதபுரத்தையடைந்து. இறைவனுக்குப் பலி செலுத்தி நன்றி கூறினர். அனுரதபுரத்திலிருந்து பம்பனெல்லம் வழியாக மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தபோது திடீரென மீண்டும் புயலும் மழையும் ஆரம்பித்தன. இரவு பகல் நீடித்தன. பாதைகள் வெள்ளத்தால் மூடப்பட்டன. திக்குத் திசையறியாத நிலையில், வழியிலுள்ள ஒரு வீட்டில் இரவைக் கழித்து, அண்மையிலுள்ள வாடி வீடொன்றையடைந்தனர். அன்று புரட்டாசி 8 ஆம் நாள். கொட்டும் மழையினுள்ளும் தேவ அன்னையின் பிறப்பு விழாவைக் கொண்டாடினர். இவ்வாடிவீடு, குருநாகலில் இருந்து சிலகல்மைல் தூரத்தில் அமைந்திருந்ததால், கன்னியர் வருகை பற்றிக் குருநாகல் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. மறுநாள் மக்கள் குழாம் வாடி வீட்டை நோக்கி விரைந்தது. திறந்த வண்டிகளில் அமர்ந்தவண்ணம் கன்னியரை ஊர்வலமாகக் குருநாகல்வரை

குப் பிரமாணிக்கமாக இருக்க விரும்பித் தான் படித்துவந்த பல்கலைக்கழகத்திலிருந்து கொட்டிங்ஜன் பல்கலைக்கழகத்துக்கு மாறிவிட்டாள். 1916ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்து விசேட சித்திபெற்றாள்.

பட்டப்படிப்பு முடிந்ததும் முதலாம் உலக யுத்தத்தின் போது செஞ்சிலுவைச் சங்கத்திற் சிலகாலம் தாதியாகப் பணியாற்றினாள். பின்னர் பிறெயிபேர்க் என்னுமிடத்திற் பேராசிரியர் ஹூரலின் உதவியாளராகப் பணியேற்றாள். அப்பொழுது, கொட்டிங்ஜன் பல்கலைக் கழகத்தில் மெய்யியற் போதனாசிரியராகப் பணியாற்றிய அடோல்ப் றெயினாக் காலமாகியதால் அவரது பணிகளைப் பொறுப்பேற்கும்படி ஈடித் அழைக்கப்பட்டாள். பேராசிரியர் றெஜினாக் செய்துமுடியாமல் விட்டுச்சென்ற பணிகளை, அவருடைய மனைவி கேட்டுக்கொண்டதற்கிணங்கத் தான் அவற்றை நிறைவு செய்ய ஈடித் சம்மதித்தாள்.

மேற்படி பணியில் அவள் ஈடுபட்டிருந்தபோது தான், கிறிஸ்து மறைபற்றிய அறிவும் கிறிஸ்தவர்களின் ஈடுபாடும் அவளுக்கு ஏற்பட்டன. கிறிஸ்து மறையில் கவர்ந்திழுக்கப்பட இப்பணியும் ஓர் ஏதுவாயமைந்துவிட்டது எனலாம். இருபதொரு வயதுவரை ஈடித் தான் ஒரு நாஸ்திகவாதியாகவே இருந்தாள் என்று அவளே கூறியிருக்கிறாள். இருந்தும் குடும்பப்பற்றும், தாய்க்குக் காட்டவேண்டிய மதிப்புக் காரணமாகவும் தாயுடன் வீட்டிலிருந்த காலத்திற் செபக்கூடத்துக்குச் செல்லுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

ஆயினும் கடுகதி மின்னுவேகத்திற் கமைய சகோதரிகளைக் குருநாகலுக்கு அனுப்பிவைப்பது இலகுவான காரியமன்று. கைக்கெட்டும் வாகனம் கரத்தைவண்டி மட்டும் தான். அதுவும் வழியில் சத்திரமோ, சாவடியோ கிடையாது. காடுகளினூடாகக் காதவழித்தூரம் கடந்தாக வேண்டும், குடிநீர் தொடக்கம், வேண்டிய அத்தனையையும் பயணிகளே எடுத்துச் செல்ல வேண்டும். திறந்த வானக் கூரையின் கீழ், இருளின் பயங்கரங்கள், விஷஜெந்துகளின் கூச்சல்கள், கொடிய மிருகங்களின் கர்ச்சனைகள் இவற்றிடையே இராப் பொழுதைக் கழிக்க வேண்டும். தம்மை எதிர்நோக்கிய இத்தனை சவால்களையும், அப்போஸ்தல வாஞ்சையினாலும் இறைவன் மேல் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையினாலும் வென்றெடுத்தார்கள்

நாளும் நேரமும் அண்மின.

பயணத்திற்கு ஐந்து கரத்தைவண்டிகள் தயாராயின. கர இருளின் நடுவே, ''தேவன் மாத்திரம்'' என்ற ஒரே நம்பிக்கையிலும், பாதுகாப்பிலும் இரவைக் கழித்தனர். மறுநாள் அதிகாலை கொக்காவிலை நோக்கிக் கரத்தைகள் புறப்பட்டன. பாதை சுரியும், பாரிய மரவேர்களும், சிறு கற் பாறைகளும் நிறைந்து காணப்பட்டது. சில்லுகள் இவற்றில் மோதி மேலெழுந்து குதித்தபொழுது, கரத்தைகளை எதிர்ப்புறமாகத் திருப்பிவிட்டன. இவை மாத்திரமல்ல, ஆங்காங்கே மூன்று மதயானைகளும் எதிர்ப்பட்டுத் தொல்லை தந்தன. பாம்புகளும், பயங்கர விஷசெந்துக்களும் குறுக்கே தென்பட்டன. இத்தகைய மெய்சிலிர்க்கும் அனுபவங்களினூடாகப் புரட்டாசி 2 ஆம் திகதி சேரப்பக்குளம் என்னுமிடத்தைச் சென்றடைந்தனர்.

அங்கிருந்து இறம்பைக் குளத்தை நெருங்கியதும், மாடுகள் நடக்க மறுத்தன. அதனால் மக்கள் குடியிருப்பையடுத்து அமர்ந்தவண்ணம் கன்னியரை ஊர்வலமாகக் குருநாகல்வரை அழைத்துச் சென்றனர். வழியில் மரியாதை அதிர்வேட்டுகள் ஆங்காங்கே தீர்க்கப்பட்டன. குருநாகல் பங்குத் தந்தை அருள் திரு. சூனவல் அவர்கள் (Fr. Chounavel) கன்னியரை ஆலயத்துள் வரவேற்று, திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் வழங்கினர்கள். தொடர்ந்தும், வரவேற்புபசாரமும், விருந்துபசாரமும் இடம்பெற்றன.

இவ்வாருக தி. கு. சபைக் கன்னியர் யாழ் நகரிலிருந்து தமது இரண்டாவது பணித்தளமாகிய குருநாகலைச் சென்றடைந்தார்கள். அழைப்பிலும், பயங்கர பயண அனுபவங்களிலும் தம்மை வழிநடத்திய ஆண்டவனின் அருஞ்செயலைப் பறைசாற்றுவது, தம் பணியென முதற்கண் உணர்ந்தனர். ''தேவன் மாத்திரமே'' அவர் புகழ் எப்போதும் எம் நாவில் ஒலிப்பதாக!

சகோ. யுடொக்சி தி. கு.

1911ஆம் ஆண்டு ஈடித் பிறெஸ்லாவு சர்வகலாசாலைப் புகுமுகப் பரீட்சையில் தேறி ஜேர்மன் மொழி, இலக்கியத் துறைகளில் நாட்டங் காட்டினுள். மொழிக்கல்வி, தத்துவ சாஸ்திரக்கல்விக்கும் ஊக்கமளிப்பதாயிருந்தது. அதனுல், தத்துவ சாஸ்திரத்திற் கவரப்பட்டு, அதில் அதிக நாட்டங் காட்டி ஆர்வத்துடன் பயின்ருள்.

பல்கலைக் கழகத்திற் படித்துக் கொண்டிருக்கும்போது எட்மன்ட் ஹரல் என்பவருடைய மெய்யியற் கருத்துரைகளாற் கவரப்பட்டாள். ஹரல் மெய்யியற் பிரச்சினைகளை அணுகுவதற்கு ஒரு புது வழியை அணுகுமுறையை அறிமுகப் படுத்தினுர். அவர் தமது புதிய உத்திகளுக்கு ஆதரவாகப் பிரமாணிக்கமுள்ள மாணவர் சிலரையும் தம்மோடு சேர்த்துக்கொண்டார். ஈடித் தனது குருநாதரான ஹரலுக்கு லுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

ஒரு கிறிஸ்தவன், இறப்பினுல் உண்டாகும் பிரிவுத் துயரை ஏற்று, அதற்கு முகங்கொடுக்கும் வலிமை பெற்றிருந்தது ஈடித்துக்கு அதிர்ச்சியை அளித்தது. தனக்கு நேர்ந்த இழப்பினுல் பெரிதும் வருந்திய பிருவுறெயினுக், தனக்கு வந்த சிலுவையாகிய துன்பத்தை இயேசுவின் பாடுகளுடன் ஒன்றித்து ஏற்றுக்கொண்டிருந்தது ஈடித்தின் புதிய சிந்தனைக்கு வித்திட்டது. தெய்வநம்பிக்கை அற்றிருந்த அவளுக்கு அந்த நிகழ்வுகள் மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தின. சிலுவையின் இரகசியமான கிறிஸ்து அவளிலே துலங்கத் தொடங்கினுர். துறவி ஆகி, அச்சிலுவையை நிரந்தரமாய்த் தன்மீது தரித்துக் கொள்ள ஆவல் கொண்டாள்.

(தொடரும்)

**விட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

## எம்கருத்து

### சம உரிமை கிடைக்குமா?

''எமக்கு நீதி மட்டுமன்று; சம உரிமையும் வேண்டும்.'' என்ற யாழ். ஆயரின் கோரிக்கை, இலங்கை வாழ் தமிழ் மக்களின் இன்றைய எதிர்பார்ப்பை இரத்தினச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துகின்றது. அதுவே சமாதானத்துக்கான ஒரே வழி.

கடந்த காலத்திற் பேரின வாதத்தின் திட்டமிட்ட செயற்பாட்டால், தமிழ்ப் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கப்பட்டன. அந்தஸ்து, வேலை வாய்ப்பு, மற்றும் வசதிகளைக் கருத்திற் கொண்டு, நாட்டின் பல பாகங்களில் இருந்த தமிழர்கள், தமிழ்ப் பேசும் சிங்களவர்களாக மாறி, பின்பு பூரண சிங்களவர்களாகத் தம்மை மாற்றிக் கொண்டனர். தமிழருக்குச் சமஉரிமை இருந்திருந்தால், இந்நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது, அவர்கள் இன்று தம்மைச் சிங்களம் பேசும் தமிழர்கள் எனக் கூறிக் கொள்வதிற் பெருமை அடைவார்கள்.

''சிங்களம் மட்டும்'' என்ற அறை கூவல் அன்று எழுப்பப்பட்டிரா விட்டால், இன்று முழு இலங்கையுமே ஒரு சிங்கள நாடாக இருந்திருக்கும் என்பதை, வரலாற்று ஆசான்கள் திட்டமாகக் கூறுவர். எனவே, இன்று இந்நாட்டுத் தமிழ் மக்கள் ''சிங்களம் மட்டும்'' என்ற சட்டம், தம் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பியதையும், உரிமைக் குரல் எழுப்பத் தம்மைத் தூண்டியதையும் நன்றி உணர்வுடன் நினைவு கூருகின்றனர்.

தமிழ் மக்கள், இந்நாட்டின் தனித்துவமான தேசிய இனம் என்பதை எவரும் மறுக்க முடியாது. பல இன மக்களைத் தன்னகத்துட் கொண்ட இந்தியாவில், சீக்கியர் சிலரைத் தவிர, மற்றைய அனைவருமே ''இந்தியா எமது நாடு'' என்ற தேசிய உணர்வுடன் வாழ்வதற்கு அங்கு அனைவருக்கும் வழங்கப்படும் சம உரிமையே காரணம் எனலாம். ''ஹிந்தி மொழி எந்த ஒரு மாநிலத்திலும் திணிக்கப்படலாகாது'' என்ற அண்ணல் நேருவின் கொள்கையை, அன்னை இந்திராவும், பிரதமர் ரஜீவ் காந்தியும் கடைப்பிடித்தமையே, இன்றும் அனைவரையும் தேசப்பற்றுடையோராக்கியுள்ளது.

அதே அமைப்பு முறையில், இலங்கையில் வாழும் தமிழர்களும், தம் தாய்த்திரு நாட்டில் வாழக் கூடிய தன்மை உருவாக வேண்டும். அப்படியின்றி, தமிழ் மக்கள் சம உரிமையற்றவர்களாக வாழும் நிலை இங்கு தொடருமானால், தேசிய உணர்வு மழுங்கடிக்கப்பட்டு, யுத்த அவலங்கள் நீங்குவதற்காகத் தம் பிரதேசங்களை, இந்திய மாநிலங்களுள் ஒன்றாக ஆக்கிடவே ஆர்வம் காட்டுவார்கள்.

ஏற்கனவே, தமிழ்ப் பகுதியையும், சிங்களப் பகுதியையும் இந்திய மாநிலங்களாக்கக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு விட்டன. இது, காலப் போக்கில் நடைமுறையாகக் கூடும் என்ற எண்ணம், இப்போது ஆட்சியாளருக்குக் கலக்கத்தை உண்டாக்கியுள்ளது.

உரிமைகளைப் பறித்ததோடு நின்று விடாது, உயிரையும் பறிக்கக் கங்கணம் கட்டிய அரசின் திட்டமே, இந்தியாவை நேரடியாக ஈடுபடச் சந்தர்ப்பம் கொடுத்தது.

வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி, மலையகத்திலும், வேறு பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளும் தீரவேண்டுமென்றால், வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சி மாநிலம் மட்டுமன்றி, யாழ் ஆயர் கூறுவதுபோல், தமிழ்மொழி, தேசிய மொழியாகவும், அரசகரும மொழியாகவும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

நாட்டின் பிரச்சினைகளே போராளிகளைத் தோற்றுவித்தன. தமிழ் மக்கள் சமஉரிமை பெற்று, நாட்டின் பிரஜைகளாக மதிக்கப்பட்டு வாழ, போதிய உத்தரவாதம் வழங்கப்பட்டால், இலங்கை நாட்டின் இறைமை, ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன பேணப் படுவதற்காகப் போராளிகளும் முன்னின்று உழைப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

தமிழ் மாகாணங்கள் இணைந்த சுயாட்சியே தமிழ் மக்களுக்கு ஒரே உத்தரவாதம். கிடைக்குமா?

**'அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம் உடையது அரசு'**

# மறைப் பணியிலும் சேவையிலும் குருக்கள் பொதுநிலையினரின் பங்கு

**1986ஆம் ஆண்டு வைகாசி மாதம் பெங்களூரில் நடைபெற்ற ஆசிய ஆயர் குழுவின் "பொதுநிலையினரின் அமைப்பு" பற்றிய கலந்துரையாடலில் இலங்கையின் பிரதிநிதியாகச் சமுகமளித்த வண. S. J. இம்மானுவேல் அடிகளார் ஆற்றிய தலைமை உரை.** தமிழாக்கம்: அருட்சகோதரி இ. பொனவென்சர்

அப்போஸ்தலத்துவம்: பொதுவான பணி (Apostolate: The Common Mission.)

திருச்சபை அதிகாரிகளினதும், பொது நிலையினரதும் அப்போஸ்தலத்துவமானது ஓர் ஒன்றிணைந்த முயற்சியாக இருக்கவேண்டியது அவசியம். அப்போஸ்தலத்துவம் பற்றிப் பொதுவாக அளிக்கப்படும் விளக்கம் இது.

அப்போஸ்தலத்துவம் என்பது, திருச்சபையின் முழுமையான பணியினது செயற்பாடாகும்; அல்லது திருச்சபையின் முழுமையான மீட்புப் பணிக்கென முழுத்திருச்சபையும் மேற்கொள்ளும் சகல முயற்சிகளினதும் ஒன்று சேர்ந்த முழுமையாகும். இந்தல்) ஒரு பொதுவான உந்துதலை (மீட்பு) ஒரு பொதுவான தன்மையைக் (கிறிஸ்துவைப் போன்று) கொண்டவை. மேலே கூறப்பட்டவை யாவும் சேர்ந்து, பொது அப்போஸ்தலத்துவத்தை உருவாக்குகின்றன. எனவே, திருச்சபை ஆட்சிப்பீடத்தின் அப்போஸ்தலத்துவமும், பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவமும் உண்மையான அப்போஸ்தலத்துவங்கள். திருச்சபை அதிகாரிகளினதும், பொதுநிலையினரினதும் பகிரங்கமான வாழ்க்கை முறைகளினுல் மாத்திரம் இவை வேறுபடுகின்றன (ஓர் ஆயர் நோயாளரைச் சந்திப்பதும், பொதுநிலையினரான மரியாயின் சேனையாளர் ஒருவர் நோயாளரைச் சந்திப்பதும்—நோயாளருக்குச் செய்யப்படுகின்ற அப்போஸ்தலத்துவம்தான். இதன் பெறுபேறுகளும், விளைவும் ஒவ்வொருவரும் செய்யும் முறையிலேதான் தங்கியுள்ளதே தவிர, ஆயர் பதவியிலேயோ அன்றேற் பொதுநிலையினர் வாழ்க்கை நிலையிலேயோ அன்று.)

துணர்ந்து முழுத்திருச்சபைகளினதும் அப்போஸ்தலத்துவத்தைத் (ஆட்சியமைப்பு சார்ந்ததும், பொதுநிலையினரதுமான அப்போஸ்தலத்துவத்தை) திட்டமிடுகின்ற குழுக்களில், திருச்சபை ஆட்சியாளர்களோடு பொதுநிலையினரும் இடம் பெறல் வேண்டும்,

நமது பொதுவான அழைப்பை, பொதுவான பணியை, பொதுவான அப்போஸ்தலத்துவத்தை நாம் எவ்வளவு உணர்ந்து கொள்கிறேமோ, அவ்வளவு நமது ஒத்துழைப்பும் சிறந்ததாய் அமைய வாய்ப்புக்கள் உண்டு. "உலகின் மட்டில் திருச்சபையின் முழுமையான மீட்புப் பணியை ஆற்றும் பொறுப்பை, ஆயர்களுக்கு மாத்திரம்தான் கிறிஸ்து வழங்கவில்லை என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்'' (L. G. 30)

## மறைப்பணியின் பெறுபேறுகள், ஆயர் பதவியிலேயோ அன்றேல் பொதுநிலையினரின் வாழ்க்கை நிலையிலேயோ தங்கியிருப்பதில்லை.

அப்போஸ்தலத்துவம், மறை பரப்புப் பணியாக, புனிதப்படுத்தும் பணியாக, காலங்களுக்குட்பட்ட பூரணப்படுத்தும் பணியாகக் காணப்படுகின்றது. மீட்பின் நற்செய்தியை அறிவித்து, புனிதமடைவதற்கான திருவருட்சாதன வழிவகைகளைப் பெறச் செய்து, இறுதிக் காலத்தை (Parousia) நோக்கி உலகின் படைப்புப் பொருள்களை படிப்படியாக ஒழுங்குபடுத்தும் பணிகள் யாவும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன; அவை செயற்படுத்தப் படுவதிலும் ஒன்றையொன்று சார்ந்து நிற்கின்றன.

அப்போஸ்தலத்துவம் என்னும் இத்தகைய ஒரு பொதுவான பணியினை முன்வைத்தே, ஒவ்வொரு கிறிஸ்தவனையும் திருச்சபை மதிப்பிடுகின்றது; திருச்சபையாகிய உடலில் ஒவ்வொருவரும் வளம் பெற்ற உறுப்பினர், பல்வேறு செயற்பாடுகளைக் கொண்டவர்களாயினும் பணியில் ஐக்கியமானவர்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறது. கடந்த காலத்தில்,

எனவே, பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவத்தை விளங்கி, அதனைப் பாராட்ட வேண்டுமானுல், கடந்த காலத்திற் செய்தது போன்று இன்றும், 'அப்போஸ்தலத்துவம் என்பது திரு ஆட்சிப்பீடத்திற்குரியது, அதிலிருந்து பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் பிறக்கின்றது.' என்னும் கருத்தை வைத்துக் கொண்டு ஆரம்பிப்பது தவறு. இது முழுத்திருச்சபையினதும் பொதுப்பணியாக/அப்போஸ்தலத்துவமாக இருக்கின்றது என்னும் கருத்தே இதன் நுழை வாயிலாகும். அதன் பின்னர், திருச்சபை என்னும் குடும்பத்தில் இப்பொதுவான பணி எவ்வாறு பகிரப்படலாம் என்பதைப்

''திருச்சபை அதிகாரிகளுடன் இணைந்து செயலாற்றுகின்ற பொதுநிலையினர், தமது பெயருக்குத்தக வாழவில்லையானுல், திருச்சபை உண்மையில் இன்னும் நிறுவப்படவில்லை, இன்னும் முழுமையாக உயிருள்ளதாக அமையவில்லை, மனிதர் மத்தியில் கிறிஸ்துவின் பூரணமான அடையாளமாகவும் இருக்கவில்லை'' (A. G. 21a)

2ஆம் வத்திக்கான் சங்கமானது பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் திருச்சபையின் மீட்புப் பணியில் ஒரு பங்கேற்பாக இருக்கின்றது என்பதையும் ஏற்றுக் கொள்கின்றது; குருக்களின்றி சுதந்திரமாகச் செயற்படக் கூடிய ஒரு நேரடியான அத்திவாரத்தில் இதனை நிறுத்துகின்றது. இருப்பினும், அப்போஸ்தலத்துவத்தின் பொதுவான திட்டத்துள் இதனை வெளிப்படையாக

## மறைப்பணியைத் திட்டமிடுவது மேல் மட்டத்தில் நடைபெறுகிறது. இது கூட்டமாகத் திட்டமிட்டுச் செயலாற்ற இடமளிக்க வேண்டும்.

'திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்' என்னும் கருத்தை அடிக்கடி தவருகப் பிரயோகிக்கின்றனர். தலைமைத்துவத்துதிற்குக் கொடுக்கப்படும் கீழ்ப்படிதலையும், பணிவையுமே கருதுகின்றனர். ஆனுல், இன்று செயல், கூட்டுப் பொறுப்பு. உடன் ஒத்துழைப்பு என்பவற்றில் ஈடுபட ஒவ்வோர் உறுப்பினருக்கும் சக்தியளித்து உற்சாகப்படுத்துவதற்காக இவ்வளமான கருத்தைப் பிரயோகிக்கும் காலம் வந்துவிட்டது.

குருக்களின் செயற்பாடுகளும், பொதுநிலையினரின் செயற்பாடுகளும் ஒரு பொதுவான கிறிஸ்தவ அத்திவாரத்தை (திருமுழுக்கு, உறுதிபூசுதல்) பார்க்க வேண்டும். இதற்காகத் தலத்திருச்சபைகளும், தேசிய திருச்சபைகளும் சேர்ந்து குருக்களுக்கும், பொதுநிலையினருக்கும் பொதுவாக இருக்கின்ற இப்பணியை, அப்போஸ்தலத்துவத்தைப் பகுத்து உணர்ந்து திட்டமிடல் வேண்டும். காலத்தின் குறிகளை அறிந்து, தேவைகளைக் கண்டுபிடித்து, திருச்சபையின் அப்போஸ்தலத்துவத்தை விபரமாகத் திட்டமிடுகின்ற பொறுப்பனைத்தும் இன்று மேல்மட்டத்திலேயே நடைபெறுகின்றன. இவ்வாறில்லாது கூட்டமாகத் திட்டமிடவும், செயலாற்றவும் இடமளிக்கப்பட வேண்டும். வேறு வார்த்தையிற் கூறினுல், காலத்தின், குறிகளைப் பகுத்

நிலைப்படுத்திக் காட்டவில்லை. இரு அப்போஸ்தலத்துவங்களினதும் பொதுத்தன்மையைப் போதிய அளவு அழுத்திக் கூறவில்லை. மாருக, ஆட்சிப்பீடத்தினது அப்போஸ்தலத்துவத்தின் முதன்மையையும், இன்றியமையாத் தன்மையையும் ஊகித்து, கற்பித்து; பொதுநிலையினரது அப்போஸ்தலத்துவத்தின் முக்கியத்துவத்தைச் சாதாரணமாகவே குறிப்பிட்டுக் காட்டியது.

திருச்சபையின் அப்போஸ்தலத்துவம் பற்றிய பொதுவான விளக்கமானது, திருச்சபைக்கு உள்ளேயும், வெளியேயும் நடைபெறுகின்ற செயற்பாடுகளை நிச்சயம் பாராட்டவேண்டும்.

(தொடரும்)

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை,
31-07-87




அன்பு இளம் உள்ளங்களுக்கு,

பொய்மைக்கு உரமாகி
பகைமையின் கரமாகி
பாசத்திற்குக் கரவுகூறும்
நீசமான நினைவலைகள்

நினைவெல்லாம் நீயேயானால்
உனைமறந்து கணமேவாழேன்
இணையில்லா அணங்கேகேளாய்
உனைப்பிரிந்து கணமேவாழேன்
என்றுதினம் கூறியவன்
இன்றுமணந்தது 5இலட்சம்.

தாய்க்கேற்ற சேயாகி
தனையிழந்த பேயாகி
திருமணச் சந்தையிலே
இருமன நகலானான்.

நித்தியமும் சத்தியமே
இத்தரையில் துணைநிற்க
சீதனம்என்கிற சீரழிவுச்சாதனம்
ஆசனம்இழந்திடத் தீரமுடன்திகழுங்கள்

நல்வாழ்த்துக்களுடன்,
அன்பு நெஞ்சன், வி. பி.

## குருகூழுத்தண்ணையின் கிசு கிசு

அடைக்கலம்: அண்ணை இந்தமுறை திருவிழாவுக்கு நல்ல சனம் அண்ணை, சாதாரணமான நாட்களில் இவையள் எங்க அண்ணை நிக்கினம்?

குருகூழுத்தண்ணை: ஏன்தம்பி, உன்னையும் இந்தத் திருவிழாவில் தானே காணுறன். ஞானஒடுக்கத்தில், ஞாயிறு பூசையிற் கூடக் காணேல்லையே. எல்லாம் சனம் கூடினு சத்திரம்எண்டு, உடுப்புக் காட்டத்தான் திருவிழாவுக்கு வாறியள். தம்பி ஒவ்வொருவராத் திருந்திட்டா ஊர் என்ன உலகமே திருந்திடும்தம்பி.

— யோகா —

## மரணம்

மலிந்துவிட்ட மானிட
ஓலங்கள் தொடர்கின்ற
நிகழ்விலே தொல்லைகளின்
துயரம் உணர்வின்றி
உறக்கத்தை ஊர்வலமாய்
மாற்றும் காட்சி
நியதியின்றி எம்
நாட்டிலே தொடர்கின்றது.

துப்பாக்கி நித்தமும்
தூக்கப்படும் போதெல்லாம்
இறந்தும் துடிக்கும்
இதயங்களின் சிவப்பு
இரத்தங்கள் இங்கே
அபயக்குரல்
பட்டினிச் சாவோடு
அவலங்கள் ஏக்கங்கள்
அகற்றமுடியாத ஓலங்கள்
ஓயாமல் ஓசையெழுப்பும்
மரணம் தொடர்கின்றது.

கண்முன்னே கண்டு
காத்திருந்த உயிர்
கணப்பொழில் அழிந்துவிடும்
கண்கொள்ளாக் காட்சி
கண்டவரின் கண்களைக்
கசிந்துருக வைக்கும்
அவலங்கள் அநீதியாக
நீதியின மூச்சை
மூடிவிடுகிறது.

எமைவிட்டுக் கடந்துபோன
அந்தநீண்ட
நாள்களின் நினைவு
எம் இதயச்சுவர்களைக்
கீறுகின்ற கோடுகளாய்
அமைந்துவிட்ட
மரணம் எமக்குள்
மூச்சுத் துளிகளாக்
கிடக்கின்றன.

சிலுவையின் சிறப்பினைச்
சிரமத்தினின்று சிறப்பித்த
இயேசுவின் மரணம்
எம் வாழ்வின்
தொடக்கம்.

சமஜீவி
உரும்பிராய்.

# நாட்டு இளைஞர் யுவதிகளின் பங்கு

எம். ஜெராட், எழுவைதீவு.

ஒருநாட்டின் பரிபாலனத்தை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு பொறுப்பேற்று இருப்பினும், அந்த அரசு வகுக்கும் முன்னேற்றகரமான பல திட்டங்கள் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப் படாவிடின், அதனால் நாட்டிற்கோ, மக்களுக்கோ எவ்வித பயனும் இல்லை. எவ்வளவு தான் கல்வியறிவைக் கொண்டிருந்தாலும், அல்லது அரசியல் அனுபவங்களை அடைந்திருந்தாலும், ஒரு நாட்டில் இளைஞர் யுவதிகளின் சக்திகள் ஒருங்கிணைக்கப்படாவிடின் அந்த நாடு முன்னேற்றங்காண முடியாது.

ஒருநாடு நிர்வாகம், விவசாயம், தொழில்நுட்பம், மனித உழைப்பு, இயந்திரசக்தியை உபயோகிக்கும் திறமை முதலியவற்றில் ஆற்றல் உள்ளவர்களைக் கொண்டிராவிடின், அந்தநாடு ஏனைய வளர்முக நாடுகளுடன் சமதையாக நிற்க முடியாது.

எனவே, மேற்கூறிய விடயங்களில் ஆற்றல்மிக்கவர்களைத் தெரிதல், நன்கு பயிற்சியளித்தல், பயன்படுத்தல் அந்நாட்டரசின், தலையாய கடமைகள் ஆகும். இதற்கமைய, இளமையில் இருந்தே சிறுவர் சிறுமியர் நன்கு பராமரிக்கப்பட்டு, கல்வி அளிக்கப்பட்டு, திடகாத்திரமுடையவர்களாகப்பேணப் பட்டு வளர்க்கப்படவேண்டும்.

''பிள்ளையைப் பெற்று விட்டாற் போதுமா, அதைப் பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா?''

இது வெறும் சினிமாப்பாடலன்று. இது மிகவும் அர்த்தமுள்ள பாடல். இக்காலப் பெற்றோர்களிற் பெரும்பகுதியினர். பிள்ளைகளைப் பெறுவது போன்று அவர்களின் உடல் உளவளர்ச்சியில் அக்கறை காட்டிப் பேணி வளர்த்தலும் வேண்டும். தேக ஆரோக்கியம், உடல் உறுதி, மனவளர்ச்சி, அறிவுவளர்ச்சி, உள்ளப் பக்குவம், சமுதாயத்திற்கு ஏற்ப ஒழுகும்திறன், சகித்தலுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, அவசியமான இடத்திற் பிறருக்கு உதவிபுரிதல் முதலியன எல்லாம் கவனத்திற்கு எடுத்துக் கொள்வது பெற்றோரின் கடமை. இந்த ஆற்றல்களைத் தூண்டி, விரிவுபடுத்தி வளர்த்தல் ஆசிரியனின் கடமை.

இங்கு கூறிய விடயங்களில் இருந்து, கல்விக் கூடங்களின் பாரிய பொறுப்பு நன்கு புலனாகின்றது. ஆண்டவனால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் என்பார்கள். இக்கூற்றிற்கு அமைய, ஆசிரியனால் ஒரு சமுதாயத்தை ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் எனலாம்.

தீபத்தை வைத்துக்கொண்டு திருக்குறளைப் படிக்கலாம், ஒரு ஊரையும் எரிக்கலாம். அவ்விதமே ஆசிரியனின் கரங்களில் ஒப்படைக்கப்படும் சிறுவர் சிறுமியர் வளர்ந்து இளைஞர் யுவதிகளாக மாற்றம் அடையும் நேரத்தில் அவர்கள் தங்களுக்குரிய, வீட்டிற்குரிய, தாம் வாழும் சமுதாயத்திற்குரிய, தமது சொந்த நாட்டிற்குரிய, கடமைகள் எவையெவை என்பதை நன்கு புரிந்திருத்தல் வேண்டும். இதனை நிறைவேற்றுபவர்கள் ஆசிரியர்களே. ஆயினும், அவர்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டியவர்கள் பெற்றோர் ஆவர். ஒருகட்டடத்தைக் கட்டியெழுப்பும் மேசனுக்குச் சாரமரம் எவ்வளவு முக்கியமோ, அவ்விதமே ஒருசமுதாயத்தைக் கட்டி எழுப்பும் ஆசிரியனுக்குப் பெற்றோர் சாரமரமாக இருக்க வேண்டும். இக்கால இளைஞர் யுவதிகளின் போக்கு மிக விபரீதமாகக் காணப்படுவதை நாம் காண்கிறோம். எவ்வளவு தான் கல்வி அறிவைப் பெற்றிருந்தாலும் நன்கு பண்பட்ட மனப் பக்குவம் இல்லையேல் யாது பயனும் இல்லை.

# குடும்பம் ஒரு கதம்பம்

குடும்பம் ஒரு கதம்பம் பற்றிய கருத்துக்களைப் பலரும் தெரிவித்தார்கள். குறைகளும் இருந்தன. நிறைகளும் இருந்தன. மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறோம். பல கடிதங்களும் கட்டுரைகளும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன. நேரம் வரும் போது பிரசுரிப்போம்.

வேளாங்கண்ணி ஆலயவீதி, முல்லைத்தீவில் இருந்து பிள்ளை வளர்ப்புப் பற்றிய ஒரு விரிவான கட்டுரையைச் செல்வி பற்றியா றேஸ் அந்தோனிபபிள்ளை எழுதியிருக்கிறார். சகோதரி சோவியாவின் கட்டுரை, செல்வி பற்றிமா றேஸ் அந்தோனிப்பிள்ளையின் கட்டுரையைத் தொடர்ந்து வரும்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

''பெற்றோர் எவ்வழியோ பிள்ளைகளும் அவ்வழியே'' என்று பலரும் கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். இக்கூற்று முற்றிலும் உண்மை, பெற்றோர் வாழும் வாழ்க்கை முறையைக் கொண்டே அவர்களது பிள்ளைகள் எப்படிப்பட்டவர்கள் என்பதை இலகுவில் அறிந்து கொள்ளலாம். பெற்றோர் வாழும் வாழ்க்கையைப் பின்பற்றியே அவர்களது பிள்ளைகளும் வாழப் பழகிக் கொள்வர். எனவே, பெற்றோர் எப்போதும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக வாழ வேண்டும்.

பல குடும்பங்களிற் பெற்றோரே தீய பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்துக் கொண்டு தமது பிள்ளைகள் நல்ல பழக்கவழக்கங்களைப் பழக வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். உண்மையில் இப்படி எதிர்பார்ப்பது தவறு. சில சமயங்களில் பிள்ளையே பெற்றோரின் தவறைச் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையைக்கூட இப்பெற்றோர் ஏற்படுத்தி விடுகின்றனர் இப் பெற்றோர் தாமே பொறுப்பற்ற முறையில் நடப்பதோடு மட்டுமல்லாது தமது பிள்ளைகளையும் பொறுப்பற்ற முறையில் வளர்க்கிறார்கள். இந்நிலை தமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை எந்தளவு தூரம் பாதிக்கும் என்பதை இவர்கள் சிந்தித்து, அதற்கேற்ற வகையில் தம் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் தமது பிள்ளைகள் நல்ல தலைவர்களாகத் திகழ வேண்டுமென விரும்பும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தாமே முன்மாதிரியாக இறைபற்று உள்ளவர்களாக நற்பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். தமது பிள்ளைகளும் இவற்றைக் கைக் கொள்ள அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும், அவர்கள் நல்ல சூழலில் வளரப் போதிய கல்வியறிவைப் பெற உதவுவதோடு, அவர்கள் சுயமாகச் சிந்திக்க, சுயமாக வாழத் தங்கள் உரிமை கடமைகளை உணர அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

வளர்ந்து வரும் பிள்ளை எப்போதும் வீட்டிலே தன் பெற்றோருடன் இருப்பதில்லை அவன் வெளியுலகோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதாற் சமூகத்தில் பல்வேறு மட்டத்தில், பல்வேறுபட்ட குணஇயல்புகள் கொண்டவர்களோடு சேர்ந்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சில சந்தர்ப்பங்களில் வேண்டத் தகாத தவறுகளை அவன் தெரிந்தோ தெரியாமலோ செய்துவிடுகின்றான். இப்படியான சந்தர்ப்பங்களில் அவனைத் திருத்துவது பெற்றோரின் பொறுப்பாகும். எனவே, பெற்றோர் சமுதாய சூழலில் தம் பிள்ளை நடந்து கொள்ளும் முறைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வரவேண்டும். அவன் தவறு செய்யுமிடத்து அதனைத் தீர விசாரித்து, அவனே ''நான் செய்வது தவறு'' என்று உணரச் செய்து இனிமேலும், இது போன்ற தவறுகள் அவன் செய்யாத நிலையை அவனாக ஏற்படுத்திக் கொள்ள வகை செய்யவேண்டும்.

(தொடரும்)

செல்வி பற்றிமாறேஸ் அந்தோனிப்பிள்ளை

## அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இலம், யாழ்ப்பாணம்.

# வரலாற்று நூல்களுக்கு முன்னுரை

கடந்த வாரங்களில் நாம், ஆதியிலே இறைவன் ஆற்றிய அரும்பெரும் செயல்களைப் பார்த்தோம். ஆதியிலே இறைவன் மனிதனைச் சிங்காரவனத்திலே தன் சாயலாக, ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். மனிதனின் கீழ்ப்படியாமையால், இவ்வுலகிற் பாவம் நுழைந்த போதிலும், இறைவன் மனிதன் மீது கொண்டிருந்த அளவில்லாத அன்பின் நிமித்தம் இஸ்ராயேல் என்ற இனத்தைத் தேர்ந்தெடுத்து, உலகை மீட்க விரும்பினுர். இதற்காகப் பிதாப்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக் யாக்கோபு, யோசேப்பு, மோயீசன் என்பவர்களை அழைப்பதன் மூலம், இஸ்ராயேல் சந்ததியை உருவாக்குகிருர். கனேனய நாட்டிற் பஞ்சம் காரணமாக, இஸ்ராயேல் மக்கள், உயர் பதவி வகித்த சூசையின் உதவியுடன், எகிப்திற் குடியேறுகின்றனர். காலப்போக்கில், இஸ்ராயேல் மக்கள், அடிமைகளாக நடாத்தப்படுகின்ருர்கள். இவர்களின் அவலக்குரலைக் கேட்ட இறைவன், மோயீசன் மூலமாக இவர்களைச் சுதந்திர வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்ருர்.

மோயீசனுக்குப் பின், இஸ்ராயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு இட்டுச் செல்லும் பொறுப்பு, யோசுவாவிற்கு அளிக்கப்படுகின்றது. இவர், சுதந்திரப் பயணத்திலே இறைவனிலே அசையாத பற்றுறுதி கொண்ட, சிறந்த படைத்தளபதியாகப் பல எதிரிகளை வெற்றிகொண்டு, மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குக் கொண்டு சேர்க்கிருர். கடவுள் கட்டளைப்படி, இவர்கள், கல்கலா என்ற இடத்தில் எல்லோரும் விருத்தசேதனம் செய்து (யோசு 5: 2) எரிக்கோ சமவெளியிற் பாஸ்கா விழாவைக் கொண்டாடினர். யோசுவா, மக்களை வழி நடத்திவந்த ஏழு ஆண்டுகளில், கானுன் நாடு முழுவதையும் தன் உடைமையாக்கி, உடன்படிக்கைக் கூடாரத்தைச் சீலேமில் அமைத்து, கானுன் நாட்டைப் பன்னிரண்டு பாகங்களாகப் பிரித்து, இஸ்ராயேலரின் பன்னிரண்டு கோத்திரங்கட்கு வழங்கினுர். (யோ 18: 1) இறுதியாக, மக்களைச் சிக்கேம் என்ற இடத்திற்கு அழைத்து, மக்களுடன் இறைவனின் உடன்படிக்கையைப் புதுப்பித்தார்.

சகோ. மனுவேற்பிள்ளை டேவிற்

# பைபிள் மாமா

வணக்கம் மருமக்களே!

நீங்கள் என் கதையை — இல்லை 'பைபிள் கதை'யைக் கேட்க ஆவலோடு இருப்பீர்கள் என எனக்குத் தெரியும். உங்களை ஏமாற்றுவேனு? சொல்லுகிறேன்.

பாதுகாப்பு அரண் அமைக்கப் புறப்பட்ட இந்த மக்கள் இறைவனைத் துச்சமாக எண்ணி, தங்களைப் புத்திசாலிகள் என்று காட்டப் புறப்பட்டனர். இவர்களுக்கு இறைவன் என்ன பதிலடி கொடுத்தார் தெரியுமா?

இவர்களின் பாஷையைப் பிரித்து விட்டார். அப்போ ஒருவன் கல் கேட்டால் - மற்றவன் மண் கொண்டு வருகிருன். மண்வெட்டி கேட்டால்-கடகத்தைக் கொண்டு வருகின்ருன். சீமேந்து கேட்டால் - தண்ணா கொண்டு வருகிருன். அப்போ இவர்களுக்குள்ளே குத்து மல்லு! கட்டடம் - பாதுகாப்பு அரண் கட்ட முடியவில்லை. எனவே, ஒவ்வொரு மொழி பேசுபவர்களும் ஒவ்வொரு திக்காய்ப் பிரிந்து போகிருர்கள், கட்டடமும் முற்றுப் பெறவில்லை. மொழிக் குழப்பத்தினுல், ஜனங்கள் வேறு வேறிடங்களுக்குப் பிரிந்து போகிருர்கள்.

இப்போ தெரியுமா? மருமக்களே, இந்த உலகில் வாழ்கின்ற மக்கள் ஒரே தந்தையின் பிள்ளைகளாக வாழ்ந்த போதிலும், ஆணவத்திஞல் - இறைவனை எதிர்த்து நின்றதால் - ஆண்டவன் கொடுத்த தண்டனையால் இப்போ பல மொழிகள்.

இப்படிப் பல மொழிகள் பேசுவதால், 'நான் முதல் வந்தவன் - நீ பிந்தி வந்தவன் - என் மொழிதான் பெரியது - பிந்தி வந்த நீ எனக்கு அடிமை, என்றெல்லாம் வீராப்புப் பேசி, ஒருவரை யொருவர் நசுக்க - நீ பெரிய சண்டியனே? நானும் இந்த மண்ணின் சொந்தக்காரன் தானே? என்னை நீ அடிமை கொள்ள விடுவேனே?' என்று துப்பாக்கி ஏந்தும் அளவிற்கு நாம் புறப்பட்டு விட்டோம்.

ஜாதிகள் பிரிந்த விதம் முன்னே சொன்னேன். மொழி பிரிந்த விதம் கேட்டீர்கள். இவையெல்லாம் மனிதனின் ஆணவத்திஞல் வந்தவினைகள். இப்போ அனுபவிக்கிறோம்.

பிரிந்து போன மக்களையும் ஒன்று சேர்த்து, நல்வழிப் படுத்தி விடுகின்றவர் தாம் நம் இறைவன், அதற்குப்பின் என்ன நடந்தது? எப்படி மக்கள் ஒன்று பட்டார்கள்? என்று மருமக்கள் துடிப்பது எனக்கு விளங்கும்.

சொல்வேன் தானே.

அன்புடன்
பைபிள் மாமா

அறிந்துகொள்ளுங்கள் — 20

# ஆபிரகாமின் தவறுகள்

ஆபிரகாம் எகிப்தில் தன் மனைவி சாருளைத் தன் சகோதரி என்று அழைத்தார். இச்செயல் இறுதியில் வினையாக முடிய, கடவுள் குறுக்கிட்டு இச்சிக்கலைச் சரிசெய்கிருர். (ஆதி. 12-ம் ஆதி.) எனவே, இவர் ஓர் ஏமாற்றுப் பேர்வழி என்று சிலர் கூறுகின்றனர்.

E. A. ஸ்பெயின் என்ற புதைபொருள் ஆய்வாளர், அண்மையிற் கண்டுபிடித்த கண்டுபிடிப்புக்களின்படி இது. ஹீரியன் பழக்கத்தில் உண்டு என்கிருர். சமூகத்தில் மதிப்பிற்குரிய மனிதர்கள் தங்கள் மனைவியரைப் பெருமைப்படுத்தும் வகையில் அவர்களைத் தங்கள் சகோதரி என்று அழைப்பது வழக்கம். ஆபிரகாமும் மதிப்பும், செல்வாக்குமுடையவர். எனவே, அவரும் அப்பழக்கத்தைக் கடைப்பிடித்திருக்கவேண்டும்.

பிள்ளை இன்றிச் சாருள் தன் கணவனை நோக்கி, "இதோ நான் பிள்ளை பெருவண்ணம் ஆண்டவர் என் கருப்பத்தை அடைத்திருக்கிருர். நீர் என் வேலைக்காரியோடு சேரும். அவள் மூலமாவது நான் பிள்ளைகளை அடைவேனுக" (ஆதி. 16: 2) என்று தன் வேலைக்காரி ஆகாரை ஆபிரகாமுக்கு மனைவியாகக் கொடுத்தாள். அதன் மூலம் இஸ்மாயல் பிறந்தார். இஃது என்ன அடாதசெயல், ஆபிரகாம் பாவம் செய்தார் என்று நாம் எண்ணுகின்ருேம்.

இது சரியா? தவறு? என்று கூறவேண்டின் நாம் அக்கால வழக்கத்தை அறியவேண்டும். ஹீரியன் ஆட்சியில் ஹாமுராபி அரசனுடைய பல சட்டங்கள் முக்கியம் பெற்றவை. ஏறக்குறைய 3800 வருடங்களுக்கு முன் 8அடி கல்லில் 21 வரிகளில் சட்ட விதிகளை எழுதி நாட்டை ஆட்சிசெய்த (1792-1750) அரசன் இவன்.

அச்சட்டப்படி பிள்ளைப் பேறில்லாத மனைவி, தன் அடிமைப் பெண்ணைத் தன் கணவனுக்குக் கொடுத்து அவ்வுறவின் வழியாகப் பிறக்கும் குழந்தையைத் தன் குழந்தையாக எடுத்துக்கொள்ளலாம். ஆனுல், பிள்ளையைப்பெற்றபின் தலைவி விருப்பப்படி, அடிமைப் பெண், மீண்டும் பழைய அவளது அடிமைநிலைக்கே திரும்பிவிடவேண்டும். பிறகு தலைவிக்குப் பிள்ளை பிறந்தால் அடிமை வழியாகப் பிறந்த மகனுக்கு உடைமையில் யாதொரு பங்கும் இல்லை. இச்சட்டத்தை நன்கு அறிந்த ஆபிரகாமும், சாராளும் இப்படிச் செய்ததில் ஆச்சரியம் இல்லை.

எனவே, இச்செயல்கள் எமக்குத் தவறுகத் தோன்றினுலும், அஃது அக்கால வழக்கப்படி சரியானதே. மேலும் கடவுள் பாவம் பெருகிய மனுக்குலத்திலிருந்து ஒருவரை அழைத்துப் படிப்படியாக அவர் மூலம் ஓர் இனத்தைத் தயார் செய்கிருர்.

இ. ம. ஜெயசீலன்

# காவலன் கண்மணிகள்

புனித வளன்
கத்தோலிக்க அச்சகம்,
த. பெ. எண் 2,
யாழ்ப்பாணம்.

மடல் 25.

அன்பு நிறை காவலன் கண்மணிகாள்,
இனிய யேசுவின் ஆசிகள் என்றும் உங்களுள் நிறைவதாக.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை.
தந்தை சொல்மிக்கதோர் மந்திரமில்லை.

என்பன ஆணித்தரமான, ஆழ்ந்த பொருள் பொதிந்த பொன்மொழிகளாகும். இவை தாம் எம் கலாசாரமாகும். எம் கலாசாரம் வளம்மிக்கது; வலுமிக்கது. கலாசாரச் சீரழிவை இன்று நாம் எதிர்கொள்கிறோம். கலாசாரம் சீரழியாமற் காப்பது எம் ஒவ்வொருவரின் கடமையாகும்.
கண்மணிகளே,

ஆண்டவனின் அன்புக் கட்டளைகள் பத்தில் நான்காவது கட்டளை எது? என்று கேட்டால், பதிலை ஒரு நொடியிற் சொல்லி விடுவீர்கள். ஆனுல், அந்தக்கட்டளையை, எம் நல்ல பிதா எதற்காக எமக்குத் தந்தார் என்று சிந்தித்து, அக்கட்டளைப்படி எத்தனை பேர் வாழ்கிறீர்கள் என்று கேட்டால், பதில் வரத் தாமதமாகும். ஏன் இந்தத் தாமதம்?

'உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கப் போகிற நாட்டிலே நீ நெடுநாள் வாழும் பொருட்டு, உன் தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக'
(யாத்திராகமம் 20: 28)

"பிள்ளைகளே, எல்லாவற்றிலும் பெற்ருேருக்குக் கீழ்ப்படிந்திருங்கள். இதுவே, ஆண்டவருக்கு உகந்தது"
(கொலோசியர் 3: 20)

அன்புக் கண்மணிகளே, பெற்ருேரை மதிக்காத பிள்ளைகள் நம்மிடையே பெருகி வருகிருர்கள் என்று பல பக்கத்தால் வந்த தாக்கத்தால்தான், இம்மடலில் இதனை எழுதினேன். பெற்ருேரை மதிக்காத பிள்ளைகளாக நீங்கள் இருந்தால், தயவு செய்து உங்கள் போக்கை மாற்றிக் கொள்ளுங்கள் என்று இறையேசுவின் நாமத்தாற் கேட்டுக்கொள்கிறேன். நாளைய உலகு நலமிகு உலகாக மாற, இன்றைய உலகில் நன் மக்களாக வாழ வாழ்த்துகிறேன். மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

அன்பின்
அன்பு விழி.

* * *

தியாகச்சுடர்

## தாவீதடிகள்

**விடைகள்:**

1) தந்தையின் பெயர்: தாவீதுப்பிள்ளை
தாயின் பெயர்: எலிசபெத்து
2) பிறந்த திகதி: 28-6-1907
3) திருமுழுக்கு: 27-07-1907
4) குருப்பட்டம்: ஐப்பசி 1931
5) ஆய்வு நூல்: தொல்காப்பியம்
6) "பக்க எண்ணிக்கை: 720 (2 பாகம்)
7) சுவாமி சா. ஞானப்பிரகாசரின் பணியைத் தொடர்ந்தார்.
8) 'இயேசு' தான் முதற் சத்தியாக்கிரகி.
9) 'செபமாலை'
10) யாழ் பொது நூலகம் தீயிடப்பட்டது.

தாவீதடிகள், மாணவர் உலகின் மதிப்புமிக்க தலைவராவர். யாழ் புனித பத்திரிசியார் கல்லூரிப் பணியுடன் தன்னை இறுகப்பிணைத்துக் கொண்ட அன்புத் தொண்டனுவர். அன்று, அவர் பசித்த மாணவன் பசிபோக்கினுர். வசதியற்ற மாணவர்க்கு வசதிக்கட்டணம் கட்டினுர்.

உடையற்ற மாணவர்க்கு உடையளித்தார். தத்தெடுத்துப் பலரைத் தன் பராமரிப்பில் வளர்த்து வந்தார்.

அன்று அவரால் உருவாக்கப்பட்டோர் இன்று உலகின் பல பாகங்களிலும் சீரும் சிறப்புடனும் வாழ்கின்றனர்.

மூபதினெரு மொழி வல்லோன்,
பொன் மனச் செம்மல்,
எளிமையின் எளிமை கொள் வடிவோன்,
ஒற்றுமையின் உறுதிப்பாட்டை
உறுதியுடன் உரைத்த உத்தமன்.
இயேசுவின் அடியான் எம் தாவீதடிகளை
இதயத்தில் இருத்த நாம் என்ன செய்யலாம்?
தீயதில் வெந்து வெடித்த
வானுயர்ந்த 'யாழ் பொது நூலகம்' போல்
கருகி நிற்க விடுவோமா? இல்லை, கருணைமிக்க
யேசுவிடம் உயிர் ஊட்ட வேண்டுவோமா?
காலம்தான் பதில் சொல்லும்.

**போட்டியில் வெற்றி பெற்ருேர்:**

1) எஸ். எம். யோண்சன், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
2) செல்வி ஜசிந்தா பிறேம்னி & ஆசீர்வாதம்
மாரீசன்கூடல், இளவாலை.

சிறுகதை

# நினைவுகள் உறங்குவதில்லை

ஆண்டுகள் பல கடந்தாலும் சில பசுமையான நிகழ்வுகளை, அவற்றிலும், இளமைப் பருவத்தில் நடந்தவற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்து மீட்பதில் ஒரு தனியான மகிழ்ச்சியும், அந்தநாள் மீண்டும் வந்திடாதோ? என்ற தவிப்பும் ஏற்படுவது இயல்பு.

அமலன் என் சகபாடி, அயல் வீட்டவன், என் நண்பன். அன்றிரவு எங்கள் வீட்டிலேயே தங்கிவிட்டான்.

மறுநாள் அதிகாலையில் மாட்டுவண்டி மூலம் பூநகரிப் பாதையால் மடுப்பதிக்குப் போவதற்கு அப்பா ஆயத்தஞ் செய்திருந்தார். அமலன் குடும்பமும், எங்கள் குடும்பமும் பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தன.

அமலனும் நானும் படுக்கையிலே புரண்டுகொண்டு, நெஞ்சு நிறையப் பூத்திருக்கும் ஆனந்தமான கற்பனைகளிலும், உரையாடல்களிலும் வெகு நேரத்தைக் களித்துச் சலித்து உறங்கிவிட்டோம்.

அம்மா தட்டி எழுப்பியதும் துள்ளி எழுந்து பரபரப்புடன் புறப்படத் தயாரானோம். எல்லோரும் வண்டியில் ஏறியதும் அப்பா ஆசனத்தட்டில் அமர்ந்து மாடுகளைத் தட்டிவிட்டார். வழிவழியே காட்சிகளைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையால், நானும் அமலனும் அப்பாவுடன் நெருங்கி உட்கார்ந்துகொண்டோம்.

வண்டி புறப்பட்டதும் அம்மா செபமாலையை ஆரம்பித்தார். செபமாலை முடிந்ததும் நாங்கள் மடுமாதாவின் பாடல்களைப் பாடினோம். வண்டியிலிருந்தபடியே காலையுணவை முடித்துக்கொண்டோம்.

மத்தியானவேளை, ஒருமணியளவில் அடர்ந்த மரங்கள் நிறைந்த நிழலுள்ள ஓர் இடத்தில், அப்பா வண்டியை நிறுத்தினார். முதன் முதல் மாட்டை அவிழ்த்து, வைக்கோல் போட்டு, நீர்காட்டி இளைப்பாற விட்டார்.

வெயிலின் அகோரத்தாலும், பிரயாண அலுப்பாலும் எங்களுக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது. நாங்களும் உணவுண்ணத் தயார் செய்தோம்.

கரும்பைத்தேடி எறும்பு வருவது போல நாங்கள் உணவுப் பொதிகளை அவிழ்த்த சமயம் எங்கிருந்தோ பிச்சைக்காரன் ஒருவன் நாங்கள் இருக்குமிடத்துக்கு வந்து சேர்ந்தான்.

'அம்மா பசிக்குது' என்று இரண்டு கைகளையும் நீட்டியபடி கெஞ்சினான். அமலன் பிச்சைக்காரனைப் பார்த்ததும் வேடிக்கையாகத் தானும் அவனைப் போலக் கைகளை நீட்டியபடி ''அம்மா பசிக்குது''என்று அவனைக் கேலிபண்ணிச் சிரித்தான். நானும் அமலனோடு சேர்ந்துகொண்டு கிழவனைப் பரிகாசம் செய்தேன்.

அமலனின் தாய எங்கள் செயலைப் பார்த்துவிட்டார். கடுங் கோபத்துடன் வந்தார்.

''அமலா வாடா இங்கே'' என்றபடி அமலனின் கையைப் பிடித்து இழுத்தார். படார் படார் என்று அவன் கன்னங்களில் மாறி மாறி அறைந்தார் அமலன் கோவென்று கதறி அழுதான்

என் தாயாரும் என்னை அழைத்தார். நான் பயந்து நடுங்கிய வண்ணம் மெல்ல மெல்ல அவர் அருகே சென்றேன். அம்மா, என்னை அணைத்தவண்ணம், ''பிச்சைக்காரர்களைப் பரிகாசம் செய்யக்கூடாது மகனே. அதுபாவம்- பிச்சைக்காரருக்கு நாங்கள் கொடுப்பது கடவுளுக்குக் கொடுப்பதுபோல'' என்று அன்போடு கூறி, ஓர் இலையில் சோறும் கறியும் வைத்து ''இதைக் கொண்டுபோய் அந்த அப்பாவிடம் கொடு'' என்றார்.

நான் அவ்வாறே செய்தேன். பசுமரத்தாணிபோல என் தாயின் வார்த்தைகள் என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன. அன்றுமுதல் ஏழை எளியவர்களுக்கு என்னால் இயன்ற உதவி செய்வதில் அமைதியும் மகிழ்ச்சியும் கண்டேன்.

அறுபது ஆண்டுகள் கழித்து இன்று நான் வீடிழந்து, பொருள் இழந்து, உறவிழந்து, பிறந்த மண்ணிழந்து தமிழகத்தில் ஓர் அகதி முகாமில் இருக்கின்றேன். ஒரு மாத காலமாகப் பசி தீர, வயிறார உணவுண்டு காலங்கழிக்கிறேன்.

கருப்பத்தில் முதிர்ந்த சிசு தாயின் உதரத்துள் உதைப்பதைப் போன்று, அந்தப் பழைய நினைவு என் உள்ளத்தில் உதிக்கிறது



## ஆண்டின் 18ஆம் ஞாயிறு 2-08-87
## பசி தீருமா?

இசை. 55: 1—3 உரோ. 8: 35, 37—39 மத். 14: 13—21

''தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று முழங்கினார் பாரதி. உணவு சமூகத் தன்மை வாய்ந்தது என்றிடும் பாரதி, மனிதன் மாண்புள்ளவன் என்று எண்ணவும் வைக்கிறார்.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'' ஆவர். பசித்தவரையும் தாகமுள்ளோரையும் வருந்தி அழைக்கிறார் இசையாஸ் இறைவாக்கினர். பணமுமின்றி விலையுமின்றி இலவசமாக வந்து உண்டு குடியுங்கள் என்று அழைக்கிறார்.

இறைவன் ஒரு வள்ளல். அவர் கொடுப்பதெல்லாம் தானம். அன்பும் அருளும் கொண்ட அவர் எல்லா மனிதருக்குமென்றே எல்லாச் செல்வங்களையும் நிறைவாகப் படைத்தவர். அவர் வளம் கொழிக்கும் இவ்வுலகை யாவருக்கும் உடைமையெனக் கொண்டாலும், மனிதன் தனது சுயநலத்தினால் பிறருக்குச் சொந்தமானவற்றையும் தனதாக்கிக் கொள்ளுகிறான். செல்வங்களைத் தனக்குத் தனக்கெனப் பதுக்கிப் பதுக்கி வைக்கிறான். தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்குமென்றே மிதமிஞ்சிய விதத்தில் கவர்ந்து கொள்கிறான்.

இவ் அபகரிப்பு நாடகத்தில், கடத்தல், கறுப்புப் பணம், சுரண்டல், ஏமாற்றம், களவு, கொள்ளை, அநீதி, இலஞ்சம் போன்ற வேடங்களை அவன் தரிக்கின்றான்.

உலகில் உள்ள எண்பது வீதமான வளங்களை இருபது வீதமான மேல்மட்டத்தவர் கவர, ஏனைய இருபது விதமான செல்வத்தையும் பகிர எண்பது வீதமானோர் திண்டாடுகின்றனர். இப்படிப்பட்ட சூழலில் உலகில் ஒருவர் அல்லர், பல்லாயிரக் கணக்கானோர் பசியுடன் வாடுகின்றனர். அடிப்படைத் தேவைகளில் ஒன்றுகூட நிறைவேற்றப்படாத அடிமைகளாக மடிகின்றனர்.

ஐந்து அப்பங்களை ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்குப் பகிர்ந்து வழங்கிய இறைவள்ளல் இயேசு, மீண்டும் இவ்வுலகத்திற்கு வந்தாலும் பாரதியின் கனவு இச்சூழலில் நனவாகாது: ஆகவே, ஐந்து அப்பங்களையும் பகிர்ந்தளிக்கும் நல்ல உள்ளம் ஒன்றுவது வேண்டும். உடற்பசி தீர்ந்து, மனநிறைவுடன் மனிதன் வாழ வேண்டும் என்றால், உணவு பற்றிய ஓர் ஆன்மீகக் கண்ணோட்டம் மிக மிக அவசியம்.

மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று என்கின்ற போது மனிதனுக்கு வெறும் உடல் மட்டுமன்று, அவன் உள்ளரீதியாகப் பண்புகளிலும் வளர வேண்டும் என்கிறார் இயேசு நற்கருணை உணவிற்கு அழைக்கப்பட்டோர் ஆலயத்தினுள் வீண் பிரச்சனைகளையும் போட்டி பொறாமைகளையும் தேவையற்ற பராக்குகளையும் வளர்த்துக் கொள்வதால் ஆன்மீக வளர்ச்சி குன்றிப் போகிறது; அதனால், இதயங்கள் வரண்டு போகின்றன. பசியோடு வாடிய மக்களைக் கண்டு இளகிய இயேசுவின் இரங்கும் உள்ளம், கரிசனை எமக்கும் தேவை

உணவைப் பகிருமுன் அண்ணாந்து பார்த்து இறைவனை வேண்டிடும் இறை உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் வளர வேண்டும். புனித சின்னப்பர் உரோமருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுவது போல, கிறிஸ்துவில் நிலையான அன்பிருந்தால் எத்தீமையும் எம்மை அணுகாது. அவ்வுண்மையான அன்பு பகிரவைக்கும்; பசிதீர்க்கும்; உள்ளத்திற்கும் உடலுக்கும் நிறைவும் திருப்தியும் தரும்; உயிர் அளிக்கும்.

சுவாமி போல் அ. ம. தி.




(4)

## பிறந்த மண்ணில்

குருவென ஆன பின்னர்
  குறித்த தன் பணிகள் செய்யப்
பெரு மகன் தன்னை யீன்ற
  பெருமை சேர் சங்குவாளி
திரு நகர் செல்க வென்று
  திருச்சபைத் தலைமை கூற
அரும்பணி யாற்ற வென்றே
  அடைந்தனன் சொந்த ஊரை.

கொங்கணி மொழியில் யேசு
  கொள்கையை அள்ளி வீசி
எங்ஙனும் செய்த சேவை
  எண்டிசை பரவி ஏக
செங்கரும் பூறும் சாற்றைச்
  சேர்ந்திடும் எறும்பு போல
அங்கவர் தன்னைத் தேடி
  ஆயிர மாக வந்தார்.

பங்கய வதனம் தன்னிற்
  பரவிடும் சோதி கண்டு
இங்கொரு தேவ தூதன்
  இவனெனக் கொண்ட பேர்கள்
சங்குவா ளியெம் மூரின்
  சம்மன சிவரே என்று
பொங்கிடு மகிழ்ச்சி யாலே
  போற்றினர் யோசே வாஸை.

ஆட்சியில் உள்ள பேரும்
  அவர்தமை நாடி வந்தார்
மாட்சிமை நேரிற் கண்டு
  மண்டியிட் டாசி பெற்றார்
சூழ்ச்சியாய் ஆளும் போக்கைச்
  சூதினை விட்டு உண்மைச்
சாட்சியாய்த் தம்மை மாற்றிச்
  சத்திய நெறியில் நின்றார்.

''ஐயனே வாரும் உங்கள்
  அருள் மொழி தாரும் இங்கு
பொய்யிருள் எம்மில் நீங்கப்
  போதனை பொழியும் வந்து
மெய்யொளி ஞானம் ஈய
  மேய்ப்பனே வருக'' வென்று
கையுடன் அனுப்பி வைப்பர்
  காவிடும் சிவிகை தன்னை.

''ஆவினைத் தேடி நின்று
  அழுதிடும் கன்றைக் காணக்
காவியோ செல்லு வார்கள்
  கால்களும் இல்லை யாமோ
பாவியேன் பரமன் தந்த
  பணியினை நடந்தே செய்வேன்
சீவியம் முழுதும்'' என்று
  சென்றவர் செய்வார் சேவை.

''துறவிகள் வாழ்க்கை யொன்றும்
  துரைகளின் வாழ்க்கை யன்று
அறவழி தன்னில் வாழ்ந்
  அடுத்தவர்க் கீந்து தன்னை
உறவுகள் ஓங்க மற்றோர்
  உள்ளங்கள் தோறும் நின்று
கறவெனக் கடமைப் பாலைக்
  கனிந்தளித் திடுதல் வேண்டும்.''

''கனவுகள் நூறு கொண்டு
  கடமையை மறந்து நின்று
உணவுகள் சுவைகள் நாடி
  உணர்வுகள் வழியில் ஓடி
நினைவுகள் தூய்மை யின்றி
  நின்றிடல் துறவு அன்று
எனையிறை படைத்த தெல்லாம்
  எளிமையிற் பணிகள் செய்ய.''

என்றவர் சேவை என்னும்
  ஏரினில் தன்னைப் பூட்டி
நன்றென உழுது மக்கள்
  நெஞ்செனும் நிலத்தில் வித்து
நின்றது முளைத்து ஓங்கி
  நற்கனி நல்கும் வேளை
ஒன்றது நூறு ஆக
  ஒடித்தனன் தன்னை அன்று.

(தொடரும்)

## எழுதிச் செபியுங்கள் போட்டி—10

எமது நாட்டின் ஜனதிபதிக்காக வரம்வேண்டி, ஒரு செபம் எழுதி, அனுப்புங்கள், தபால் அட்டையில் தெளிவாக எழுதி 10-8-87க்கு முன் பாதுகாவலன், தபாற்பெட்டி இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். சிறந்த செபத்துக்குப் பரிசு ரூபா 15/=

அடுத்த போட்டியும், பரிசுபெறுபவர் பெயரும் 28-8-87 பாதுகாவலனில் வெளிவரும்.

### எழுதிச்செபியுங்கள் போட்டி 9 இல் பங்குபற்றிப் பாராட்டைப் பெறுவோர்

1. கொலஸ்ரிக்கா பிலேந்திரன், 2ஆம் வட், அல்லைப்பிட்டி.
2. திருமதி. சிறியபுஷ்பம் சுகந்தரன், அரசடிவீதி, நவாலி.
3. பொ. அன்ரன் டயஸ், யாழ். பழையபூங்கா வீதி.
4. சேவியர் கெமில்ரன் பிகுருடோ, பள்ளிமுனை, மன்னார்.
5. அ. மேரி நிலானி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
6. அ. ஸ்கொலஸ்ரிக்கா கலா, மாரீசன்பதி, இளவாலை.
7. V. மேரிபற்றிக் தி.கு.க.மடம், இறம்பைக்குளம், வவுனியா.
8. பி. நியூட்டன், 40, டேவிற்வீதி, யாழ்ப்பாணம்.

### பரிசுபெறும் செபம்

தென் இலங்கையில் ஆர்ப்பாட்டம் நடாத்துவோரின் மன நிலையைப் புரிந்து கொள்ளும் வரம்வேண்டி எழுதப்பட்ட செபம்.

அளவில்லாத அன்புகொண்ட பரம்பொருளே, உமது பெயரால், விசுவாசத்தில் நிலைத்திருக்கும் கத்தோலிக்க மக்களாகிய திருச்சபையின் உறுப்பினர்களான எமது நாட்டுமக்கள் அனைவரும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மையை அளித்தருளும். அண்மையில், இந்தியாவின் மனிதாபிமான செயலைக்கண்டித்துத் தென்பகுதிக் கத்தோலிக்க மக்கள் நடாத்திய ஊர்வலம், அரசியல் இலாபம் தேடுபவர்களால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட ஒரு செயலென்பதை வடபகுதி மக்கள் ஏற்றுக் கொள்ள வரமருளும்.

அவர்கள், அரசியல் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப் படுகிறார்கள். செய்வது என்னவென்று புரியாது தவிக்கும் இவ்வேளையில், நாம் எமது சொல் அம்புகளை எய்து, அவர்கள் மனங்களை நோகடிக்காது உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து, அவர்களையும் சகோதரர்களாக மன நிறைவோடு ஏற்று, நாட்டின் சமாதானத்துக்காக அவர்களுடன் சேர்ந்து செபிக்கும் பரந்த மனப்பான்மையைத் தந்தையே எமக்குத் தந்தருளும். ஆமென்.

பரிசு பெறுபவர்:- திருமதி. நிர்மலா அருள்நேசன்,
மாரீசன் கூடல், இளவாலை.

## சிலைகள் செய்யவேண்டுமா?

உங்களுக்குத் தேவையான புனிதர்களின் சிலைகள், மற்றும் உருவச்சிலைகள் புதிதாகச் செய்விக்க, பழைய சிலைகளைத் திருத்திப் புதிய வர்ணம் தீட்ட எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

சிலைகள் சீமேந்து, வெண் சீமேந்து, மரம் ஆகியவற்றால் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு : A. S. நாதர்
புனித அந்தோனியார் ஆலயம்.
சுன்னுகம்.

A/87

## சின்னமடு மாதா திருவிழா

27-07-1987 மாலை 5-00 மணிக்குக் கொடியேற்றம்.

நவநாள்களின் ஆயத்த வழிபாடுகள் திருச் செபமாலையுடன் தினமும் மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும்.

04-08-1987 நற்கருணைத்தினம்
மாலை 5-00 மணிக்குத் திருச்செபமாலை
5-45 மணிக்குத் திருப்பலி
6-30 மணிக்கு நற்கருணை ஆராதனை.

05-08-1987 அன்னைதினம்
காலை 5-00 திருப்பலி
6-30 திருவிழாத் திருப்பலி, தொடர்ந்து அன்னையின் திருப்பவனி.

சிறப்புப் போக்குவரத்து வசதிகள் அராலித்துறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பங்குத்தந்தை
கரம்பொன் - நாரந்தனை

A/88

## அறிவித்தல்

பாதுகாவலன் பத்திரிகையில், விளம்பரங்களையோ மரண ஞாபகங்களையோ பிரசுரிக்க விரும்புவோர், இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே, அவற்றை எம்மிடம் சேர்ப்பித்தால் மட்டுமே அவை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.




ஆடி 29.

புனித மார்த்தம்மாள்

புனிதை மரியாளுக்கும், லாசருக்கும் சகோதரியாவாள். இவள், ஆண்டவரைப் பரிவன்புடன் வரவேற்று, மிகக் கவனமாக அவருக்குப் பணிவிடை புரிந்தாள். இவளுடைய மன்றாட்டின் விளைவாக இவள் சகோதரர் உயிர்த்தெழப் பெற்றார்.

ஆடி 30

புனித கிரிசோலொகு இராயப்பர்:

ஆயர் இத்தாலியில் எமிலியாப் பகுதியில், இமோலா நகரில், புனிதர் ஏறத்தாழ 380ஆம் ஆண்டிற் பிறந்தார், அந்த நகரிலேயே குருமார் கூட்டத்தைச் சேர்ந்தார். 424ஆம் ஆண்டில், இராவன்னு நகர் ஆயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தம் மந்தையைப் பற்றி மிகுந்த அக்கறை கொண்டவராய், அதைத் தம் மறையுரைகளாலும் அறப்பணிகளாலும் பேணிப் பயிற்றுவித்தார். ஆடி 30ஆம் நாள் மரித்தார்.

ஆடி 31

புனித இலோயோலா இஞ்ஞாசியார்:

குரு புனிதர் இஸ்பானியாவில், கன்டாபிரியாப் பகுதியில், இலோயோவா என்னுமிடத்தில், 1491ஆம் ஆண்டிற் பிறந்தார். அரண்மனையிலும், படையிலும் வாழ்க்கை நடத்தினார். பின்பு, இறைவனிடமாய் மனந்திரும்பி, பரீஸ் நகரில் இறைமை நூல் படித்து முடித்தார். தம்முடன் சில தோழர்களையும் கூட்டிச் சேர்த்து, உரோமையில் இவர்களை ஒரு சபையினராக அமைத்தார். பனிதர் நூல்கள் எழுதியும், சீடர்களைப் பயிற்றுவித்தும் மிக நற்பயனுள்ள அப்போஸ்தலத்துவம் புரிந்தார். 1556ஆம் ஆண்டு ஆடி31ஆம் நாள் உரோமையில் மரித்தார். 1622ஆம் ஆண்டு புனிதர் பட்டம் பெற்றார்.

### 5-ம் ஆண்டு நினைவு தினம்

சி. அமிர்தநாதன்

மலர்வு 24-11-1929 உதிர்வு 28-06-1982

ஆண்டுகள் ஐந்து இன்று அமைதியில் உருண்டதப்பா.

அழுகின்றோம் பிள்ளைகள் நாம் மீண்டும் எப்போ காண்பதென்று.


எம்பரனின் பாதமதில், உன்னான்மா நிம்மதியாய் உறங்க அன்னவரை வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக, மாமூலை புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற்பலி 28-06-87 இல் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவரை இழந்து துன்புறும்
மனைவி, பிள்ளைகள்.
'மசபியேல்'
மாமூலை, முள்ளியவளை. A/86

## பாராட்டுகின்றோம்

யாழ். புனித மரியன்னை பேராலயப் பீடப்பரிசாரகர்கள், இவ்வாரம் 250 பாதுகாவலன் பிரதிகளை விற்பனை செய்வதால், யாழ். ஆசனக் கோவில் பத்திரிகை வினியோகம் 400 ஆக உயர்ந்துள்ளது. நன்றி. பாராட்டுக்கள். இவ்வாரம் 4000 பிரதிகள் அச்சிடப்பட்டு விற்பனையாகின்றன. இதுவே, அண்மைக் காலத்தில் ஆகக்கூடிய தொகை. ஆ-ர்




பாதுகாவலனின் 3-7-87 இதழில் இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண இலங்கைக்கத்தோலிக்கத் திருச்சபையின் சார்பில் இலங்கை ஆயர்கள் பேச்சு வார்த்தைக்காக இந்தியா செல்ல இருப்பதாக ஒரு செய்தி காணப்படுகிறது. (வெரித்தாஸ் ஜூன் 21) அதே இதழின் முன்பக்கத்தில் கொழும்புக் கத்தோலிக்கரின் ஊர்வலம் என்ற வசனங்கள் காணப்படுகின்றன. இவை ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாகவல்லவோ காணப்படுகின்றன.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண இந்தியா செல்லும் கத்தோலிக்க ஆயர் குழுவில் வடக்கு, கிழக்கு மாகாண ஆயர்களும் அங்கம் வகிப்பார்களா ?

நோய்நாடி நோய்முதல்நாடி
அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்
(948)

என்பதற்கிணங்க மேற்படி குழலில் அங்கம் வகித்துச் செல்ல இருக்கும் தென் இலங்கை ஆயர்கள் பேச்சு வார்த்தைக்குச் செல்லுமுன், வட, கிழக்கு மாகாணங்களுக்கு வருகைதந்து உண்மை நிலையை நேரில் அறிந்து கொள்ளலாம்.

சுரேன்.

## சிந்தியுங்கள் சிரியுங்கள்

கன்று:- அம்மா நீ எனக்குப் பால்தராமல் வீட்டுக்காரருக்குக் கொடுக்கிறியே, அவர்கள் எவ்வளவு நன்றி கெட்டவர்கள்?

தாய்ப்பசு:- ஏன் அப்படிச் சொல்லுகிறாய், அவைதானே இரை தாறது.

கன்று:- இரைதருவது பாலுக்காக, ஆனல், பதுங்குகுழி தங்களுக்கு மட்டுந்தான் வெட்டி வைச்சிருக்கினம்.

எழுதியவர்:- சு. யூட்பாலேஸ்வரன், முல்லைத்தீவு.

### 1-ம் வருட நினைவு தினம்

இ. அந்தோனியாள்

பிறப்பு 20-01-1921 இறப்பு 13-04-1986

கருணை நிறைந்த இறைவா, இறந்த இன்னசிப்பிள்ளை அந்தோனியாளின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக மாமூலை புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற்பலி 28-06-87இல் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவரை இழந்து துன்புறும்
மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
'மசபியேல்'
மாமூலை, முள்ளியவளை. A/84

### 2-ம் ஆண்டு நினைவு தினம்

இ. சின்னப்பு

பிறப்பு 01-06-1900 இறப்பு 03-06-1985

இரக்கமுள்ள இறைவா, இறந்த இன்னசிப்பிள்ளை சின்னப்புவுக்கு நித்திய பேரின்ப வீட்டைக் கொடுத்தருளும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக, மாமூலை புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற்பலி 28-06-87 இல் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவரை இழந்து துன்புறும்
மருமகள், பேரப்பிள்ளைகள்.
'மசபியேல்'
மாமூலை, முள்ளியவளை. A/85

### 31ஆம் நாள் நினைவில் நிழல்

திருமதி ஆன்மேரி
இராசநாயகம்

1945-9-14 1987-6-30

தன் சுயநலத்தையும் சுயமதிப்பையும் தேடாது தீராத நோயினல் துவண்டபோதும் இறக்கும் வரை இறை அன்போடு பிறரை அன்பு செய்த திருமதி ஆன்மேரி இராசநாயகம் அவர்கள், தம் அன்பர்கள் அனைவரையும் விட்டு ஆண்டவனடி சேர்ந்த 31ஆம் (30-7-87) வியாழக் கிழமை அன்று அவரது ஆன்மசாந்திக்காகச் சில்லாலை புனித ஆரோக்கிய மாதா ஆலயத்திலும், கொழும்பு சந்தலூசியார், கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயங்களிலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும். அப்பலியிற் பங்கு கொண்டு அவரின் ஆன்மாவிற்கு ஆண்டவனின் அருள்கிடைக்க வேண்டிக்கொள்ளும்படி கேட்கும்.

அன்னை தந்தை இழந்த
அன்பு மக்கள், பெற்றோர்,
சகோதரிகள், மைத்துனர்,
மருமக்கள், உறவினர்.

A/89

பாதுகாவலன்
PATHUKAVALAN

# இவ்வாண்டு சமாதானம் வரும்

## மரியாளின் ஆண்டில் திருத்தந்தையின் நம்பிக்கை

திருத்தந்தை பெந்திகோஸ்து விழாவன்று மரியாளின் ஆண்டைத் தொடக்கி வைக்கையில், இந்த நிகழ்ச்சிகளினால் அதிகரிக்கும் செபங்கள், இடர்ப்பட்டுக் கொண்டிருக்கும் மனுக்குலத்திற்குச் சமாதானத்தைக் கொண்டு வருவதற்குத் துணைபுரியும் என்பதில் நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை ஒரு புதிய "பெந்திக்கோஸ்து எனவும், மரியாளைக் கத்தோலிக்கப் பெண்களின் முன்மாதிரி எனவும் குறிப்பிட்டார்.

மரியாளின் ஆண்டை ஆரம்பிப்பதற்கு முந்திய நாள் மாலை நேரம் ரோமாபுரியின் புனித மேரி மேஜர் பசிலிகா தேவாலயத்திலிருந்து திருத்தந்தையின் செபமாலை சர்வதேச தொலைக்காட்சியின் மூலம் ஒளிபரப்பப்பட்டது. செய்மதி மூலமான நேரடி ஒளிபரப்பில் 31 நாடுகளிலுள்ள 15 கோடி மக்கள் இந்நிகழ்ச்சியைக் கண்டுகளிக்கக் கூடியதாக இருந்ததுடன், மரியாளின் வேறு 16 திருத்தலங்களிற் கூடியிருந்த மக்கள், அச்செபமாலையிற் கலந்து கொண்டதையும் காணக் கூடியதாயிருந்தது.

நள்ளிரவு வேளையில், புனித இராயப்பர் சதுக்கத்தில் நடந்த திருப்பலியின்போது, திருத்தந்தை மரியாளின் ஆண்டை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார் திருத்தந்தை இச் செய்தியை அறிவித்தவுடன், பீடத்தின் படிகளிற் பந்தங்கள் ஏற்றப்பட்டன. அதே சமயத்தில் இராயப்பர் ஆலயத்தின் மீதும் சதுக்கத்தைச் சூழவிருக்கும் தூண்கள் மீதும் பந்தங்கள் ஏற்றப்பட்டன.

திருத்தந்தை தமது உரையில் ''தூய ஆவியின் திருநாளன்று நாம் மரியாளின் ஆண்டை ஆரம்பிப்பது பொருத்தமானதே. ஏனெனில், முதற் பெந்திக்கோஸ்தன்று அப்போஸ்தலர்களுடன் அவளுமிருந்தாள். அன்று தான் திருச்சபை பிறந்தது. அன்றுமுதல், மீட்பின் நற்செய்தி மக்களின் வரலாற்றினூடாகப் பரவிக் கொண்டிருக்கின்றது'' எனக் குறிப்பிட்டார்.

## கிரிசுட்டான் தேவாபுர ஆலயத் திறப்புவிழா

இம்மாதம் 4ந் திகதி (சனிக்கிழமை) அன்று தேவாபுரத்தில் (கிரிசுட்டான்) புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கிறிஸ்து அரசர் ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டு வழிபாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இனக்கலவரங்களினாற் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு வழிபாட்டுக்கென ஆலயம் இல்லாதிருந்தது ஒரு பெரும் குறைபாடாயிருந்தது. அருள் திரு. தேவராஜா அடிகளார் பெயர் இக்கிராமத்துக்குசூட்டப்பட்டு அவரே இக்கிராமத்தின் சிற்பியாக விளங்கினார்.

மன்னார் மறைவட்டத்தில் மனித முன்னேற்ற இயக்குநராக இருந்து, அரும்பணியாற்றிய இவரை, மக்கள் நன்றியுணர்வோடு நினைவு கூர்கின்றார்கள். எமது மன்னார் மறைவட்ட ஆயர் பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் பணிப்புரையின் பேரிலும், ஆதரவின் பேரிலும்தான் இவ்வாலயம் அருள் திரு. எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரால் அஸ்திவாரமிடப்பட்டது. எமது ஆயர் அவர்களே இவ்வாலயத்தைத் திறந்து வைக்க இருந்தாராயினும் திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக அவர்களால் வரமுடியாமற் போய்விட்டது. எனவே மடுப்பரிபாலகர் அருள் திரு. குருஸ் அடிகளும் பங்குத்தந்தை அருள் திரு. ம. சூசைப்பிள்ளை அடிகளாரும் இவ்வாலயத்தை ஆசீர்வதித்து வழிபாட்டுக்குத் திறந்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து கூட்டுத்திருப்பலிப் பூசையும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இறுதியில் ஒரு சிறிய பாராட்டு வைபவமும் நடைபெற்றது. பெருந்தொகையான மக்கள் அயற் கிராமங்களிலிருந்து வந்து கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

தகவல்: செல்வி பிலோமினா
தேவாபுரம்

## கத்தோலிக்கர் வியட்நாமிற் கைது

வியட்நாமில், ஹோ சி மின் நகரிலுள்ள ஒரு கத்தோலிக்க ஆலயத்திற்கு வெளியே கத்தோலிக்கருக்கும், பொலிசாருக்குமிடையிற் கடுமையான கைகலப்பு நிகழ்ந்தது. இதன் விளைவாக, பிதா ட்ரான் டின் து உட்படப் பிற்போக்குவாதிகளான, கத்தோலிக்க தலைவர்கள் பலர் கைதுசெய்ய பட்டனர். பொலிசாரின் தாக்குதலின்பின் 70 தொன் அரிசி, ஆயுதங்கள், வெடிமருந்துகள், பிரதியெடுக்கும் இயந்திரம் ஆகியவை கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வியட்நாம் முழுவதிலும் உள்ள கத்தோலிக்கரை, அரசாங்கத்துக்கு எதிராகத் தூண்டி விடுவதற்கு இந்த நிலையம் பிற்போக்கு வாதிகளாற் பயன்படுத்தப்பட்டதென வியட்நாம் செய்தியொன்று கூறுகிறது. வியட்நாமில், கத்தோலிக்கர் வாழ்வு அவ்வளவு எளிதானதாக இல்லை. வத்திக்கானுடன் தொடர்பு வைத்துக் கொள்வதை அரசாங்கம் அனுமதித்தாலும், அது பிற விடயங்களில் திருச்சபையைக் கட்டுப்படுத்த முனைகின்றது.

வியட்நாமின் 40 இலட்சம் கத்தோலிக்கரின் ஆன்மநலன்களைக் கவனிக்க ஒரு கருதினால், 43 ஆயர்கள், 1300 குருக்கள் உள்ளனர். 1975 இல் தென் வியற்நாம் தோற்கடிக்கப்பட்டபின் திருச்சபை நடத்திவந்த சகல நிறுவனங்களும் அரசினாற் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

## வங்கதேசப் புதிய மறைவட்டம்

வங்களதேஷின் புதிய மறைவட்டமாகிய மைமன் சிங்கின், புதிய ஆயர் பிதா பிரான்ஸிஸ் கோமஸ், செப்டெம்பர் மாதம் ரோமாபுரியிலிருந்து திரும்பியதும் அபிஷேகம் செய்யப்படுவார். 56 வயது நிறைந்த இவர் ரோமாபுரியில் தற்போது கலாநிதிப் பட்டத்துக்கான தமது கல்வியைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறார்.

புதிய மறைவட்டமாகிய மைமன்சிங், டாக்கா மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 16,440சதுர கிலோ மீற்றர்களைக் கொண்டது. இதில் எட்டுப் பங்குகள் உண்டு இங்குள்ள 43000 கத்தோலிக்கருள் பெரும்பாலானோர் மங்கோலிய இனமான காரோ இனத்தைச் சேர்ந்தவர்கள்.

## பாடசாலைகளைத் திரும்பப் பெறுவதில் தாமதம்

பாகிஸ்தானில் 1972ஆம் ஆண்டு, ஜனாதிபதி பூட்டோவினால் தேசிய மயமாக்கப்பட்ட பாடசாலைகளைத் திரும்பவும் தனியார் கைக்கு மாற்றுவது, இன்னும் பெரும் பிரச்சினையாகவே இருக்கின்றது. இவ்விடயம், அண்மையிற் கூடிய பாகிஸ்தான் ஆயர் பேரவையிலும் ஆராயப்பட்டது.

கிறிஸ்தவர்கள், 50 க்கு மேற்பட்ட தமது பாடசாலைகளை, திருப்பித் தருமாறு ஜனாதிபதி ஸியாவுள் ஹக்கைக் கேட்டிருந்தனர். அரசாங்கம் 1983இல் அதற்குச் சம்மதம் தெரிவித்தாலும், அதை நிறைவேற்றுவதைப் பிராந்திய சபைகளிடம் விட்டுவிட்டது.

பாகிஸ்தானின் 80 வீதமான கத்தோலிக்கர் வாழும் பஞ்சாப்பில் இஃது அமுல் நடத்தப்படவில்லை. பிரதம மந்திரி முகமது கான் ஜுனேஜோ பாடசாலைகள் அவற்றின் முந்திய சொந்தக் காரருக்குக் கொடுக்கப்படும் என வாக்களித்தாலும், பல முஸ்லீம் ஆசிரிய சங்கங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. ஆசிரியர்களுக்கு, அரசாங்கத்தின் கீழ்க் கூடிய சம்பளமும், குறைந்த வேலையும் கிடைத்த படியால் அவர்கள் அதை விட்டுவிட விரும்பவில்லை.

அரசாங்கம், பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் போது கொடுத்த சில வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என ஆயர்கள் கருதுகின்றனர்.

## அரச அலுவலிற் குருவின் மகிழ்ச்சி

வியட்நாமில் மாகாண மக்கள் சபையொன்றிற் கடமையாற்றும் கத்தோலிக்கக் குருவான பிதா லிச் தமது குருத்துவ அழைத்தலுக்கும், கொம்யூனிஸ்ட் அரசாங்கத்தில் வேலை பார்ப்பதற்கும் எவ்வித முரண்பாடும் தாம் காணவில்லையெனக் கூறியுள்ளார். 1986இல் வியட்நாம் ஆயர் பேரவை வெளியிட்ட ஓர் அறிக்கையில் ''நாம் கத்தோலிக்கர், ஆனால் வியட்நாம் குடியரசின் பிரசைகள் இரண்டுக்கும் முரண்பாடில்லை'' எனக் கூறியுள்ளதைப் பிதா லிச் ஆமோதிக்கிறார். ''தேசாபிமானம் தானே ஏற்றுக்கொண்ட ஒரு கடமையன்று. அது நற்செய்தியின் பணிப்புரை'' என 1980ஆம் ஆண்டில் வியட்நாமிய திருச்சபை கூறியுள்ளதைத் தமது பங்கு மக்களுக்கு அடிக்கடி நினைவூட்டுகிறார். தமது பங்கு மக்களின் புதிய வாழ்வையும், அவர் தனது பங்களிப்பையும் பற்றிப் பெருமையுடன் எடுத்துக் கூறுகிறார்.

இளவயதில் விவாகம் செய்யாது, குடும்பத்தைத் திட்டமிட்டால், கல்விக்கும் உழைப்பிற்கும், குடும்ப வாழ்வுக்குத் தேவையான அனுபவத்தைப் பெறுவதற்கும் கூடிய நேரத்தைச் செலவிடலாம் என்று அவர் அறிவுரை கூறுகிறார்.

வியட்நாமில் குறைந்தபட்சம் 40இலட்சம் கத்தோலிக்கரும் 3000 குருக்களும் உள்ளனர்.

## பூந்தோட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றினார். ''புனித மரியன்னை யாழ் பேராலய பீடப் பணியாளர் சபையிலே நீங்கள் சேர்வதன் முக்கிய நோக்கங்கள் மூன்று அவை (1)குருத்துவ அழைப்பைப் பெறல்.

(11)நற் குண சீலர்களாக வாழுதல்.

(111)பீடத்திலே இறைவனுக்குப் பணி செய்தல்.

ன எமக்கு ஏற்ற முறையிலே உரையாற்றினார். பின்னர் பல நிகழ்ச்சிகள் சபை அங்கத்தவரால் வழங்கப்பட்டன இவற்றின் பின் பங்குத்தந்தை, 1986ம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளுக்குப் பரிசில்களை வழங்கினார்.

தகவல் தா. மினேசன்.

### 1987 ஆகஸ்டு 6 — 15
### யாழ். புனித மரியன்னை பேராலய விழா

## வாழ்வுதரும் இறைவாக்கு

நாமே மீட்போம். அப்போது
எல்லா மக்களும்
உனக்கு மீட்பளிக்கும்
ஆண்டவர் நாமே
என்பதை அறிந்துகொள்வர்.

இசை. 49: 26

இறைவாக்கு வாழ்வுதரும்

## பாதுகாவலன் வளர நிதி

இன்றுவரை எமக்குக் கிடைத்த பாதுகாவலன் நிதி ரூபா 28, 393/= ஒவ்வொரு வாரமும் பாதுகாவலன் பத்திரிகைக்கு, மேலதிக செலவு ரூபா 1000/=, பத்திரிகை விநியோகம் பெருகுவதற்காகவே, நாம் விலையைக் கூட்டாதிருக்கிறோம். உங்கள் நன்கொடைகளை வரவேற்கிறோம். பாதுகாவலன் வளர, வாசகர்கள் பெருக உங்கள் உதவி நிச்சயம் தேவை. உதவ முன் வாருங்கள். நன்கொடைகள் அனைத்தும் பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்